
உ

# அருள் ஒளி

## Sri Arumuga Navalar Schools

Arumuga Navalar Saivapragasa Vidhyasalai Trust

Chidambaram



## 150th Year Celebration

(1864 - 2014)

December 4,5 & 6 - 2015

## ஆறுமுகநாவலர் சிறப்புமலர்

வெளியீடு

ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

110

தெல்லிப்பழை, இலங்கை

2015

# திருவெண்ணாமலைத் திருக்காட்சி







# அருள் ஒளி
## (மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்
**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**
உதவி ஆசிரியர்
**திரு. சு. ஏழூர்நாயகம் அவர்கள்**
**ஐப்பசி கார்த்திகை மாத மலர்**
**2015**

வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை.

பதிவு இல. : ISSN 2362 - 0587
ISBN 978 - 955 - 23 - 0019 - 3

e-mail : thurkaiammantemple@gmail.com
Face book: tellidurga@gmail.com

# சிதம்பரம் நாவலர் பாடசாலையின் 150 ஆண்டு பூர்த்தி

நல்லைநகர் நாவலர் பெருமான் இவ் உலகில் 56 ஆண்டுகள் மட்டுமே வாழ்ந்தார். ஆனால் அம்மகான் சாதித்த சாதனைகள் பலநூறு ஆண்டுகள் கடந்தாலும் மறக்கமுடியாதன. ஈழத் திருநாட்டின் சைவத் தமிழ் வளர்ச்சிக்காக இவர் ஆற்றிய தொண்டுக்கு நிகராக எவராலும், இவரின் சாதனைகளை முறியடிக்க முடியாது. எண்ணிறைந்த பணிகளை தீர்க்க தரிசனத்தோடு ஐந்து தசாப்தங்களில் நிறைவேற்றியவர். இப்பெருமகனாரை சிவத்தமிழ் செல்வி அம்மையார் அவர்கள் "சைவத் தமிழர்களின் கலங்கரை விளக்கு" என வர்ணிப்பார்கள்.

நல்லைநகர் நாவலர் பெருமான் அச்சு இயந்திரம் வாங்குவதற்காக ஒரு தடவை தமிழகம் சென்றார். அவ்வேளை சிதம்பர தரிசனம் செய்யும் வாய்ப்பு அவருக்குக் கிட்டியது. ஆடல் அரசன் அம்பலவாணனைத் தரிசித்த நாவலர் பெருமான் ஆலயச்சூழலில் உள்ள தில்லைவாழ் அந்தணர் மரபில் வந்த சிறார்கள் போதிய சமய அறிவின்றி இருப்பதைக் கண்டு கவலையுற்றார். சிதம்பரத்து தீட்சிதர்கள் பெருமைக்குரியவர்கள். அவர்களை "தில்லைவாழ் அந்தணர் தம் அடியார்க்கும் அடியோம்" என சைவ உலகம் போற்றித் துதிக்கின்றது. அக் கௌரவத்துக்குரியவர்கள் அக் கௌரவத்தைப்

பேணவேண்டுமென நாவலர் கவலையுற்றார். அதன் விளைவாக எழுந்ததே சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை. இன்று இப்பாடசாலையை சிதம்பரம் நாவலர் உயர்நிலைப் பள்ளி என அழைக்கிறார்கள்.

ஈழத்தமிழரான நாவலரால் பாரத தேசத்தில் நூற்று ஐம்பது ஆண்டுகளுக்கு முன் நிறுவப்பட்ட இப்பாடசாலையின் வரலாற்று விழா டிசம்பர் மாதம் மூன்றாம், நான்காம், ஐந்தாம் திகதிகளில் கோலாகலமாகக் கொண்டாடப்பட இருப்பது மகிழ்ச்சி தரும் விடயமாகும். நாவலர் பெருமானை நினைவுகூர்ந்து அவரது உருவச்சிலை அவர் ஸ்தாபித்த பாடசாலை வளாகத்தில் திறந்து வைக்கப்பட இருப்பது பெருமைதரும் செய்தியாகும். நாவலர் பெருமானின் முயற்சியால் அவர் சிதம்பரத்தில் தேடிய சொத்துக்கள் ஏராளம் அவற்றில் இன்று நிலைபெற்றிருப்பது இப்பாடசாலை மட்டுமே. சிதம்பரத்தில் அவர் உருவாக்கிய அச்சியந்திரசாலை அன்று பதிப்பித்தல் பணியில் அருந்தொண்டாற்றியது. அவை யாவும் இன்று வரலாற்று ஆவணங்களில் மட்டும் அறியக்கூடியதாக உள்ளது.

நாவலர் பெருமானின் பெருமைகளை இந்திய அறிஞர்கள் காலத்துக்குக் காலம் பெருமையாகப் பேசினாலும் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாடுகளில் நாவலர் பெருமானுக்குக் கொடுக்கவேண்டிய முக்கியத்துவங்கள் இதுவரை சரியாகக் கொடுக்கவில்லை என்பது சில அறிஞர்களின் குற்றச்சாட்டாக உள்ளது. எதிர்காலத்தில் உலகத்தமிழ் அரங்குகளில் நாவலரின் அர்ப்பணிப்புமிக்க பணிகள் கருத்தில் கொள்ளப்படவேண்டும் என்பது எமது கருத்தாகும். நாவலர் பெருமானின் சிதம்பரம் பாடசாலையின் 150வது ஆண்டு விழா குறித்து பல்வேறு ஏற்பாடுகளை அப்பாடசாலைச் சமூகம் செய்துள்ளமை பாராட்டுக்குரிய விடயமாகும்.

- ஆசிரியர்

# நாவலர் பெருமானும் சிதம்பரத்துக் கல்விப் பணியும்

**கலாநிதி ஆறு. திருமுருகன் அவர்கள்**

ஈழத்திருநாடு செய்தமாதவத்தால் உதித்தவர் நல்லைநகர் நாவலர் பெருமான். இப்பெருமகன் ஈழத்துக்கு மட்டும் அன்றி முழுச்சைவத்தமிழ் உலகத்துக்கும் அளப்பரிய தொண்டாற்றியவர். நைஸ்டிக பிரம்மச்சரிய வாழ்வை மேற்கொண்ட இப்பெருமகன் 56 வருடங்கள் மட்டும் இம்மண்ணில் வாழ்ந்தவர். இவர் சாதித்த சாதனைகள் ஏராளம் திரிகரணசுத்தி காரியசித்தி என்பார்கள். அவர் செய்த காரியங்கள் யாவும் வெற்றி பெற்றமைக்கு அடிப்படைக் காரணம் அவரது தூய அர்ப்பணிப்பு மிக்க வாழ்வு என்றால் மிகையாகாது.

**ஒத்தது அறிவான் உயிர்வாழ்வான் மற்றையர்**
**எல்லாம் செத்தாருள் வைக்கப்படுவார்.**

என்ற வள்ளுவரின் குறளுக்கு அமைய வாழ்ந்த பெருமகன் காலத்துக்கு ஒவ்வக் கூடிய நற்காரியங்களை செய்து கடவுள் நிலையில் சமூகத்தால் போற்றப்படுகின்ற பாக்கியம் பெற்றவர். ஈழத்திருநாட்டில் கிறிஸ்தவ மிஷனரிகளின் ஆதிக்கம் தலைவிரித்தாடிய காலத்தில் சைவத்தமிழர்களுக்காக துணிந்து நின்று போராடியவர். இவர் வாய்ச்சொல் வீரராக மட்டும் இருந்துவிடாமல் சைவத்தையும் தமிழையும் வாழவைப்பதற்கான வழிமுறைகளை ஏற்படுத்திய தீர்க்கதரிசி என வரலாற்றுலகம் இவரை போற்றுகிறது. சுதேசிகளுக்கு சொந்தப்பாடசாலை அமைய வேண்டும் என்பதற்காக துணிந்து செயற்பட்டவர். யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணையில் முதல்முதலில் சைவப்பிரகாச வித்தியாசாலை என்ற பாடசாலையை தோற்றுவித்து வெற்றி கண்டவர். ஊர் தோறும் சைவப்பாடசாலைகளையும் சைவ உயர் நிலைப்பள்ளிகளையும் தன வந்தர்களே, சமய ஆர்வலர்களே ஆரம்பியுங்கள் என அறைகூவல் விடுத்தார். நாவலரின் வேண்டுதலால் பல சைவப் பாடசாலைகள் ஊர்தோறும் தோற்றம் பெற்றன. நாவலரின் வேண்டுதலால் அவர் மறைந்த பின்பு இந்துக்கல்லூரிகள் பல ஊர்களில் எழுந்தன. ஈழத்து கல்வி வளர்ச்சியின் கலங்கரை விளக்காக நாவலர் பெருமான் விளங்கினார்.

## நாவலரும் சிதம்பரமும்

நாவலர் பெருமான் யாழ் மத்திய கல்லூரியில் ஆசிரியராக பணியாற்றியவர். அவரது திறமையைப்பயன்படுத்தி பைபிளை தமிழில் மொழி பெயர்ப்பதற்காக பேர்சிவல் பாதிரியார் நாவலரை இந்தியாவுக்கு அழைத்துவந்தார். நாவலரின் புலமையால் பைபிள் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு சைவத்தமிழர்களை மதம் மாற்றுவதற்கு மிஷனரியினர் பயன்படுத்தியதைக்கண்டு கவலையுற்ற நாவலர் தனது ஆசிரியப் பதவியைத்துறந்து சைவத்தமிழைக் காக்க புறப்பட்டார். அதற்காக கல்விச்சாலையை நிறுவிய நாவலர் சைவசமய நூல்களை, பிரசுரங்களை வெளியிட்டு மக்களை நெறிப்படுத்த வேண்டும் என ஆவல் கொண்டார். அதற்காக இந்தியாவில் அச்சு இயந்திரத்தை கொள்வனவு செய்வதற்காக புறப்பட்டார். அச்சு இயந்திரத்தை வாங்கிய நாவலர் தானே அதை இயக்குவதற்கு கற்றுக் கொண்டார். சிதம்பர திருத்தலத்தின் மீது ஈழத்தமிழர்கள் பூர்வீகமாகவே உயர்ந்த

பக்தி கொண்டவர்கள். நாவலரின் மூதாதை யர்கள் காலத்துக்குகாலம் சிதம்பர தரிசனம் செய்பவர்கள். ஈழநாட்டில் பலர் தங்கள் நிலபுலங்களின் ஒருபகுதியை சிதம்பர திருக்கோவிலுக்கு தானமாக கொடுக்கும் வழக்கம் இருந்தது. வாரம்தோறும் சிதம்பரத் திற்கு அபிஷேகத்திரவியங்கள் சேகரிக்கப் பட்டு அனுப்பப்பட்டு வந்தது என வரலாற்று நூல்கள் கூறுகின்றன. பசுந்தீவு எனக்கூறப் படும் நெடுந்தீவில் இருந்தும் சுழிபுரத்தில் இருந்தும் பால், தயிர் போன்ற அபிஷேகப் பொருட்கள் வாரம் தோறும் சிதம்பர தீட்சி தர்களுக்கு கொண்டு சென்று கொடுக்கும் நெறிமுறை எம்மண்ணில் நீண்டகாலம் இருந்ததாக அறியப்படுகின்றது. இவற்றைக் கருத்தில் கொண்டு சிதம்பர தரிசனத்துக்குச் சென்ற நாவலர் பெருமான் சிதம்பரத்தில் தன்னை மறந்து வழிபாடு செய்தார்.

தில்லைவாழ் அந்தணர்களாகிய மூவா யிரவர் குடும்பத்தவர்களைக் கண்டு வழிபாடு செய்தார். எனினும் சிதம்பரத்து ஆலயச் சூழலில் வாழ்பவர்கள் சைவப்பாரம்பரிய நூல்களை நெறிமுறைகளை கற்கும் வாய்ப் பின்றி இருப்பது கண்டு நாவலர் பெருமான் கவலையுற்றார். உயர்ந்த தீட்சித பரம்பரை யில் வந்தவர்கள் சிலர் ஆசாரத்தைப் பேணாது கோயில் சுற்றாடலில் அவர்களுக் குரிய பக்குவத்தை மறந்து வாழ்வது கண்டு நாவலரின் உள்ளம் வேதனையுற்றது. இளமைத்துடிப்பு மிக்க நாவலர் பெருமான் தான் வாங்கிய அச்சு இயந்திரத்தில் சிதம் பரத்து தீட்சிதர்களுக்காக ஒரு பிரசுரம் அடித்து வெள்ளிக்கிழமை நன்னாளில் சிதம்பரத்தில் பிரயோகித்தார். சிலர் நாவல ரது கருத்தை ஏற்றுக் கொண்டனர். சிலர் எதிர்த்தனர். சில பெரியார்கள் நாவலரை சந்தித்து புலமையும், துணிவும் மிக்க நீர் சிதம்பரத்தில் தங்கி யிருந்து எதிர்கால சிறார்களுக்கு கல்வி வழங்க வேண்டும் என வேண்டுதல் விடுத்தனர்.


பலரது வேண்டுதலை உள்வாங்கிய நாவலர் பெருமான் தாயகம் திரும்பிய பின்பு சிதம்பரத்தில் பாடசாலை உருவாக்க வேண்டும். அப்பாடசாலையில் சைவசமய தத்துவங்கள், திருமுறைகள், புராண இதிகாசங்கள் கற்பிக்கப்பட வேண்டும் என சிந்தித்தார். அவரது சிந்தையின் விளை வாக எழுந்ததே சிதம்பரம் நாவலர் உயர்நிலைப்பள்ளி ஆகும். இந்த ஆண்டு அகவை 150ஐ சந்திக்கும் இப்பாடசாலை நாவலர்பெருமானின் அயராத முயற்சி யினால் தோற்றம் பெற்றது. இப்பாடசாலை யைக் கட்டுவிக்க நாவலருக்கு பலர் உதவினர். யாழ்ப்பாணம் பருத்தித்துறை சித்திவிநாயகர் ஆலய அறங்காவலர் முதல் இணுவிலில் வாழ்ந்த சைவவித்தகர் நடராச ஐயர் வரை பலர் உதவினர். சிதம்பரத்தில் நாவலர் பெருமான் கட்டிய பாடசாலையை ஆரம்பத்தில் சிதம்பர சைவப்பிரகாச வித்தி யாசாலை என்ற பெயரே சூட்டப்பட்டது. நாவலர்பிரானின் மறைவுக்கு பின்னர் சிதம்பரம் பாடசாலையை நிர்வகித்து வந்த பெரியவர்கள் நாவலர் பாடசாலை என பெயர் மாற்றம் செய்தனர். சிதம்பரம் சைவவித்தியாசாலையை நிறுவுவதற்காக 1862 மே மாதம் யாழ்ப்பாணத்தில் அவர் ஆரம்பித்த சைவப்பிரகாசவித்தியா சாலையில் விஷேட பிரசங்கத்தை நடாத்தினார். சிதம்பரத்தில் பாடசாலை அமைப்பதன் நோக்கத்தினை பிரசுரமாக வெளியிட்டார்.

1864 ஒக்டோபர் 28ம் திகதி சிதம்பரம் பாடசாலை பூரணத்துவம் பெற்றது.

நாவலரின் குறிக்கோளை அவர் ஆரம்பித்த சிதம்பரம் சைவப்பிரகாச வித்தியாசாலை பேணிப்பாதுகாத்து வந்தது. சிதம்பரம் பாடசாலை ஆரம்பிக்கப்பட்ட பின் பல நல்லகாரியங்களை சிதம்பரம் பாடசாலை யில் அடிப்படையாக கொண்டு நாவலர் பெருமான் நிறைவேற்றினார். 1864ல் திருவிளையாடல் புராண வசனம் அச்சிடல் சேதுபுராணம், இலக்கணவிளக்க சூறாவளி அச்சிடல், 1866ல் அருட்பாபதிப்பு 1867ல் சிதம்பரத்தில் ஒரு பகுதியில் ஆடு வெட்டி வேள்வி செய்யும் நடைமுறை இருந்தது. இதனைத் தடுப்பதற்கு பெருமுயற்சி எடுத்தார். அம்முறையை மாற்றுவதற்கு ஏதுவாக இருந்தார். சிதம்பரத்தில் நாவலர் பெருமான் செல்வாக்கு இக்காலத்தில் அதிகரித்தது. திருத்தொண்டைநாட்டு புண்ணிய பரி பாலனசபை தலைவராக நாவலர் பெரு மானை நியமித்தனர். 1867 ஆனிமாதம் சிதம்பர மும்மணிக்கோவையை பதிப்பித்து சிதம்பரத்தில் வெளியிட்டார். தொடர்ந்து கோயிற்புராண உரை சிதம்பரத்தில் வெளி யிடப்பட்டது. 1869ம் ஆண்டு சிதம்பரத்திலும் வேதாகம பாடசாலை மடம் என்பன நிறுவ பிரசுரம் வெளியிட்டார். 1870 பெப்ரவரி 27ம் திகதி வரை 6 ஆண்டுகள் சிதம்பரத்தில் தங்கியிருந்து சைவப்பிரகாச பாடசாலை யின் வளர்ச்சியிலும், சைவத்தமிழ் நூல் வெளியிட்டிலும் அயராது பாடுபட்டார். நாவலரின் சிந்தனைகள் வீண் போக வில்லை.

தன்னை அர்ப்பணித்து அவர் சிதம் பரத்தில் உருவாக்கிய சைவப்பிரகாச வித்தியாசாலையில் 150வது ஆண்டு பூர்த்தி இவ் வருடம் கொண்டாடப்படுவது பெருமைக்குரிய விடயம் ஆகும். நாவலரின் உயர் நிலைப்பள்ளியை தன் தள்ளாடும் வயதிலும் கண்ணை இமை காப்பது போல் காத்து வரும் சிதம்பரம் ஸ்ரீமான் சுவாமி நாதன் மற்றும் Dr. அருள்மொழிச்செல்வர் குடும்பத்தவர்களுக்கு ஈழத்திருநாடு என்றும் நன்றிக்கடன் பட்டதே. சூரிய, சந்திரர் உள்ளவரை நாவலரால் உருவாக்கப்பட்ட பாடசாலை வாழ வேண்டும் என்று பிரார்த்தித்து அமைகிறேன்.

*சிதம்பரம் ஆறுமுகநாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலையில் 150வது ஆண்டு நிறைவையொட்டி இக்கட்டுரை பிரசுரிக்கப்படுகின்றது.*




**சிதம்பரம் நாவலர் பாடசாலை**
**முகப்புத் தோற்றம்**

# நவகோள்களை அடக்கி ஆளும் சாதனை

எம்மை இப்புவியை அடக்கி ஆள்பவை நவகோள்களே. இது விஞ்ஞான ரீதியான உண்மையும் கூட. நாம் எவ்வாறு நவகோள்களையும், நாடகளையும் அடக்கி ஆளலாம் எனக் காண்போம்.

வேதாரணியத்தில் திருமறைக்காடு எனும் சிவத்தலத்தின் திருக்கதவம் வேதங்களால் மூடப்பட்டிருந்தது. அப்பர் பெருமகனாரும், சம்பந்தப்பிள்ளையும் அற்புதப் பதிகங்கள் பாடி, திருக்கதவம் திறக்கவும், பின் மூடவும் அருள்பாலித்தனர். திருமறைக்காட்டீசர் ஆலய வளாகத்தில் அமைந்த திருமடத்தில் எழுந்தருளினார்கள். அவ்வேளை பாண்டிமாதேவி மங்கையற்கரசியாரும், முதன்மை மந்திரி குலச்சிறையனாரும் அனுப்பிய தூதர்கள், ஞானக்குழந்தையைப் பணிந்து, பாண்டி நாட்டில் சமணத்தைச் சாய்த்துச் சைவத்தைத் தழைத்தோங்கச் செய்வதற்கு நற்றமிழ்வல்ல ஞானக்குழந்தை, பாண்டி நாட்டிற்கு எழுந்தருள வேண்டும் எனத் தமது தூதின் நோக்கத்தைக் கூறி நின்றனர். ஞான முனிவனும் உடன்பட்டார். சமணர்கள் தம் கொடுமைகளுக்கு ஆட்பட்ட அப்பர், சம்பந்தரை நாள், கோள்களின் நிலை சரியல்ல எனக்கூறித் தடுக்கின்றார்.

இவ் இடம் சற்றுச் சிந்திக்க வைக்கின்றது. "நற்றுணையாவது நமச்சிவாயவே" எனப் பாடித் தம்மைப் பிணைத்த கல்லினைத் தெப்பமாக மிதக்கப் பண்ணியவர், "நமச்சிவாயவே நானறி விச்சையும்" எனப்பாடி இறைவன் நமச்சிவாயத்தின் பூரண அருள்கொண்டு சமணர்களின் கொடுமைகளை வென்ற தாண்டகவேந்தருக்கு ஞானவள்ளலின் அருள்நிலை தெரியாதா என்ன? அவ்வாறு அப்பர் பெருமகனார் தடுத்ததன் காரணம் சம்பந்தப்பிள்ளையை உலகத்தவர் குழந்தை என எண்ணக்கூடாது என்பதற்காகவே. அதனால் அன்றே எமக்கு விதிதனை வெல்லும் சாதனைக்கான கோளறு பதிகமும் கிடைக்கப்பெற்றது.

ஞான உணர்வு மேலிட்டபாலறாவாயர் தம்முணர்வால் சகலத்தையும் உணர்ந்தார். சிவனடியார்தமை நாளும் கோளும் வந்து துன்பம் செய்யாது எனக் கூறி, "வேயுறு தோளிபங்கள்" எனும் தொடக்குமுடைய பதிகத்தைப் பாடினார். அனுபவரீதியாக இப்பதிகப் பலனை முற்றாக உணர்ந்த சிவஞானியர், இப்பதிகத்தைக் "கோளறு பதிகம்" என அழைத்தனர். இப்புவன வாழ்வில் எம் வினைப்பயனை அதன் தன்மைக்கு ஏற்ப ஊட்டுபவை கோள்களும், நாள்களுமே. இப்பதிகத்தைப் பாராயணம் செய்து சாதனை (பயிற்சி) செய்யும் சிவனடியார்களை நாளும், கோளும் ஊறுவிளைவிக்காது என்பதால் இப்பதிகம் கோள் + அறு பதிகம் எனப்பட்டது.

பதிக அமைப்பைப் பார்ப்போம். இப்பதிகத்தின் முதல்வரி தோறும் சிவனாரின் சுந்தரக்கோலம் போற்றப்படுகின்றது. இரண்டாம் வரிகள் தோறும் சிவனாரின் சினை

அழகைக் குறிப்பிட்டு அத்தகைய சிகையோடு "என் உள்ளம் புகந்த அதனால்" எனக் குறிப்பிடுகின்றார். பின் முதலாம் பாடல் மூன்றாம் அடியில் நவகோள்களைக் குறிப்பிட்டு அடியார்களுக்கு அவை நல்ல நல்ல என்பவர் இரண்டாம் பாடலின் மூன்றாம் வரியில் சோதிட சாத்திர அடிப்படையில் நாள்கள் எனப்படும் நட்சத்திரங்களைக் குறிப்பிட்டு "அவை நல்ல நல்ல அடியார்க்கு மிகவே" எனக் கூறுவார். இரண்டாம் பாடலில் நட்சத்திரம் பற்றிக் குறிப்பிடுகின்ற பகுதியைச் சிறிது விளக்கமாக நோக்க வேண்டியுள்ளது. இரண்டாம் பாடல் நாட்களாகிய நட்சத்திரங்களைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகின்றது.

**"ஒன்பதோடொன் றோடேழு**
**பதினெட்டோடாறும் உடனாய நாள்கள் அவைதாம்"**

அதாவது ஒன்பதாம் நாளாகிய (நட்சத்திரமான) ஆயிலியம், பத்தாம் நாளாகிய மகம், பதினாறாம் நாளாகிய கேட்டையும், ஆறாம் நாளாகிய திருவாதிரையும் ஆகிய நாட்களுடன் சேர்ந்து கணிப்பிடக்கூடிய ஏனைய நாட்களாகிய பரணி, கார்த்திகை, பூசம், சித்திரை, சுவாதி, பூராடம், பூரட்டாதி ஆகிய நாட்கள் எல்லாம் அடியார்க்கு நல்லனவற்றையே செய்யும் என்கின்றார்.

இனி இந்நாட்களைப் பற்றி சோதிடம் என்ன கூறுகின்றது எனக் காண்பபோம்.

**"ஆதிரை பரணி, ஆரல் ஆயிலியம், முப்பூரம் கேட்டை,**
**தீதறு விசாகம், சோதி, சித்திரை, மகம் ஈறாரும்.**
**மாதானம் கொண்டோர்தாரர் வழிநடைப்பட்டோர் மீளார்**
**பாய்தனில் படுத்தோர் தேரார் பாம்பின் வாய்த் தேரைதானே"**

(ஆரல் – கார்த்திகை, முப்பூரம் – பூரம், பூரட்டாதி, பூராடம்) இரண்டாம் பாடல் கூறும் நாட்களின் பலன் இவை.

மூன்றாம் பாடலில் சிறு தெய்வங்களான இலக்குமி முதலான தெய்வங்களால் நல்லன எல்லாம் கிடைக்கும் எனப்பாடி, அதன்மேல் வரும் பாடல்களில் நாள், கோள், சிறு தெய்வங்களால் வரக்கூடிய துன்பங்கள் யாவற்றையும் பதிவு செய்து, அவை யாவும் அடியார்க்கு நல்லவற்றையே விளைவிக்கும் எனப்பாடுகின்றார்.

எமது வினைக்கு ஏற்ப எமக்கு அவ்வினைப்பயனைத் தருபவை நாள்களான நட்சத்திரங்களும் கோள்களுமாம். அதேபோல இகவாழ்விற்கான சுகபோகங்களைத் தருபவை சிறுதெய்வங்களாம். அதனால்தான் முதல் மூன்று பாடல்களிலும் முக்கியமாக இவற்றைக் குறிப்பிட்டார். தொடர்ந்து பாடல்களில் அவற்றால் ஏற்படும் பாதிப்புக்களை பதிவு செய்து அவை அடியார்களுக்கு எவ்வித பாதிப்புக்களையும் தரா என்கின்றார்.

ஏற்கனவே தனது முதற்பதிகமான "தோடுடைய செவியன்" எனும் பதிகத்தில் இறைவனை "உள்ளம் கவர் கள்வன்" எனக் குறிப்பிட்டுள்ளதையும் கவனத்தில் கொள்ளல் வேண்டும்.

இறைவனின் சிகையை சிவாகமங்கள் “ஞானம்” எனக் குறிப்பிடுகின்றன.சைவ உலகால் சாத்திர நூலாகவும், தோத்திர நூலாகவும் போற்றப்படுகின்ற “திருமந்திரம்” 230ஆம் பாடல் ஈற்றடியில் “நுண்சிகை கேசமாம் நூலது வேதாந்தம் நுண்சிகை ஞானமாம்...” என இறையின் கேசத்தைப் போற்றுகின்றது. ஞானம் எனக் கூறுகின்றது. எனவே சிகை அழகோடு உளம் புகுந்த என்னும் பதம் இறைவன் உயிரோடு இரண்டறக் கலந்து நிற்கின்ற அத்துவித சம்பந்தத்தைக் குறிக்கும்.

“ஊனாகி உயிராகி உயிரின் உணர்வாகி” என்றெல்லாம் திருவாசகம் பேசும். மேலும் தந்தது நின்தன்னைக் கொண்டது என்தன்னை...” என்றும் மணிவாசகர் இந்நிலைதனைப் பேசுவார். எனவே ஞானசம்பந்தர் இப்பதிகத்தை இறையோடு இரண்டறக் கலந்து இறைநிலையில் நின்று பாடினார் என்பது துணிபு.

இப்பதிகத்தின் திருக்கடைக்காப்பு எனும் பதினோராம் பதிகத்தில் இவ்வாறு கூறுகின்றார். “மறைஞான ஞானமுனிவன் தானுறு கோளும் நாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்...” இரு விடயங்கள் இங்கே பதிவு செய்யப்பட்டுள்ளன. ஒன்று இப்பதிகத்தைப் பாடியவர் யார்? அவர் நிலை, மற்றையது யாருக்காகப் பாடினார்? என்பது.

பதிகத்தைப் பாடியவர் மறைஞான ஞானமுனிவன் எனக் குறிப்பிடுகின்றார். இரண்டு ஞானங்கள் கூறப்படுகின்றன. ஒன்று நாம் ஏற்கனவே பார்த்ததுபோல் வேதநாயகனாகிய ஞானமுதல்வன் கலப்பால் ஞானசம்பந்தம் கொண்ட முனிவனாகிய இறைநிலை. மற்றையது சைவ நாற்பாதமாகிய சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் முறையின் இறுதி நிலையான வேதம் கூறும் ஞானத்தின் ஞானநிலை. இந்நிலை சீவன் முத்தர்க்கும் அப்பாற்பட்ட இறைநிலை.

சம்பந்தர் இப்பதிகத்தை இறைவனோடு ஐக்கியப்பட்ட இறைநிலையில் நின்று பாடுகின்றார் என்பது இறைமகனார் சம்பந்தர் வாக்கு. இதனை அகச்சான்று என்பர்.

யாருக்காகப் பாடுகின்றார்? சிவனடியார்களுக்காகப் பாடுகின்றார். பாடல்கள் தோறும் அத்துவிதமாய் இறைவன் என் உயிரில் கலந்து நிற்க, ஞானநிலையில் இறைவனாக முத்த நிலையில் நிற்கின்றேன். எனை நாளும் கோளும் ஊறு செய்யாது, நாளும் கோளும் அடியாரை வத்து நலியாத வண்ணம் உரை செய்கின்றேன் என்பர். அத்துவித நிலையில் நின்று பாடுதல் என்பது இறைவனே பாடுகின்றான், அல்லது சம்பந்தர் இறைவாக்காகப் பாடுகின்றார் என்பது பொருள். எனவே இப்பதிகம் தெய்வ வாக்காகும்.

சிவனடியாரை வினைப்பயன்கள் அண்டாதவண்ணம் பாடிய பாடல்கள் என்பதால் இப்பதிகத்தைப் பாராயணம் செய்து அடியார்கள் இருவினை ஒப்பு எனும் மலங்கள் கழிந்த, நிலையான, பிறப்பற்ற, நிலையை அடைகின்றார்கள் என்பது துணிபு.

அடியார்கள் என்போர் காதலாகி கசிந்து கண்ணீர் மல்கி நாதனாகிய நமச்சிவாயம் தன் நாமத்தை, நமச்சிவாயவை, அவன் திருவடிகளைப் போற்றிச் சிந்தையில் இருத்தி, நன்னெறிக்கு இட்டுச் செல்லும் வேதநாயகன் நினைவோடு பாராயணம் செய்து சாதனை செய்துவரப் பேரின்பம் கிடைக்கும்.

யார் நமச்சிவாயவை பாராயணம் செய்யலாம் என வினவின், "கொல்வார் ஏனும் குணம் பல நன்மைகள் இல்லாரேனும்" ஓதலாம் என்கின்றார் ஞானசம்பந்தர்.

அதாவது கொல்லுதல் போன்ற பஞ்சமா பாதகங்களைச் செய்வோராக இருந்தாலும் அவர்கள் முன் கூறியது போல் "நாதன் நாமம் நமச்சி வாய" வைப் பாராயணம் செய்தால் இக்கொடுமைகளின் தீய பலன் அவர்களைச் சாராது என்கிறார் சம்பந்தர். அத்தகையோர் "நமச்சிவாய" கூறி சிவனடியாராகின்றபொழுது பாதகத் தொழில்களைக் கைவிட்டு நன்னெறியடைவார்கள் என்கிறார் மறைஞான ஞானமுனிவன். அதனால்தான் "வானில் அரசாள்வர் ஆணை நமதே" என்கின்றார்.

எனவே சிவனடியாராய் வேடங் கொண்டு கோளறு பதிகம் சாதனை செய்து நவகோள்கள் மற்றும் நாள்களை அடக்கி ஆண்டு எமது விதிதனை வென்று மீண்டும் பிறவா நிலையை எய்துவோமாக!


## சிவபூமி கண்தான சபை


தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன் வாருங்கள். உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்றிருக்கும் ஒருவருக்கு ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே இப்புண்ணிய காரியத்திற்கு ஒப்புதல் தாருங்கள்.

### தொடர்புகளுக்கு

**கலாநிதி ஆறு. திருமுருகன்**
**021 - 222 6550**

கண் வைத்திய நிபுணர்
**Dr. ச. குகதாசன்**
**021 - 222 3645**

## திருச்செந்தூர் கந்தஷஷ்டி விழாவில் சிறப்புச் சொற்பொழிவு செஞ்சொற் செல்வர் கலாநிதி ஆறு.திருமுருகன் அவர்கள்







# தெய்வப் புகழிசைத் தேனமுதம்

நாயன்மார்கட்டு
இராசையா குகதாசன் அவர்கள்

**தலம் : பத்ரகாளி** **இடம் : திருநெல்வேலி**

தானதன தான தத்த .... தனதான
ஆதரவி னாட ணைத்து பேறவையெ லாம ளிக்கு
ஆரமுத மாக வுற்று – பரிவோடே
ஆளுபுவி யேத ழைக்கு மாறருளையே கொடுத்து
ஆசைநிறை வாக நித்த – மருள்தேவி
பாதகம லாதி மிக்க நேயமுட னேது திக்க
பாவவினை வேர றுக்கு – மருளாழி
பாரதினி லேய லைக்கு பாதகம லாதி கெட்டு
பாதமுற வேவி டுக்கு – திறலாளே
வாதனை ளீவி னைக்கு ளாகியடி யேநி னைத்து
வாகதுட னேதொ ழற்கு – நினையாதேன்
வாளரியி லேறி சுற்று வாமியுன தாளி லுற்று
வாழுவர மேகொ டுத்து – அருளாயோ?
காதலுட னேது திப்பர் காசினிய தேத ழைக்க
காலருளை யேகொ டுக்கு –– திருவாளே
காதிருநெல் வேலி யுற்று காவலதை ஈயு பத்ர
காளியென வேயி ருக்கு –– முமையாளே

**தலம் : பழம்பிள்ளையார்** **இடம் : மல்லாகம்**

தனந்தன்ன தானன.... தனதான
விளங்கும்உன் தாளிணை முனம்நின்று தாழுநர்
விளம்பும்துன் பாதிக..... ளவைநீற
விரைந்தென்று மேயருள் தரும்எங்கள் தேவென
வியந்தென்று மேபுவி – யுளரோத
உளங்கொண்டு மேயெடு செயலென்று மேநிறை
வுறும்வண்ண மேயருள் –– புரிநாதா
உடன்இங்கு வானென கடம்பன்று கோரிட
உடன்றன்று மாவன – மணைவோனே
சளந்தந்த மாவினை யுளங்கொண்டு தாளிணை

சதம்வந்து மேதொழ -- நினையாதே
சகந்தன்னி லேயுழல் சடன்தன்னை யேயுனை
சரண்என்று வாழிட -- விதியாயோ?
வளந்தந்து ஆளிடு பழம்பிள்ளை யாரென
இருந்தெம்மல் லாகம -- துறைகோனே
வரந்தன்னை வாரிட புரம்நின்று ஆளிடு
வரன்எம்வி நாயக -- பெருமானே.

**தலம் : பாலமுருகன்** **இடம் : கோண்டாவில் ஞானவைரவர் பரிவாரம்**

தன்னதன தான -- தனதான
தஞ்சமென தாளை நெஞ்சுநினை வாரை
தம்வமிச மோடு -- பெருவாழ்வே
சங்கையொடு வாழ பொங்கருளை வாரு
சண்முகனென் றோது -- மருளாழி
அஞ்சலதி லாது வெஞ்சமர தாடு
அந்தவலி சூரர் -- குலமோடே
அன்றழியு மாறு அம்பிகைய ளீயு
அங்கையுள வேலை -- விடுதீரா
கஞ்சவடி நாடி வந்துபணி யாது
கன்மவினை யாலிங் கலைநாயேன்
கந்தனுன பாத நன்புகழை யோதி
கண்ணுதலுன் தாளை -- அடையேனோ?
வஞ்சியரி னோடு னன்பரினை ஆள
வண்ணமயி லேறி -- வருவோனே
வந்தியடி யாரின் புந்திநிறை வாகு
வண்ணமருள் பால -- முருகோனே.

**தலம் : வித்தகவிநாயகர்** **இடம் : கல்வியற்கல்லூரி**

தத்தனன தானன -- தனதான
அற்புதம தாலெம சித்தமுள வேதரு
அத்திமுக னாமென -- புவிபேச
அச்சமளி மாவினை கற்பகனெ னாமுன
மக்கணம தேயக -- லருளீவோய்
கற்பவையெ லாமுமெம் புத்தியதி லேறிட

கச்சிதம தாயருள் -- பொழிவேழா
கைத்தலம தேதரி யக்கனியை யேவெகு
கற்பிதம தோடடை -- திறலோனே
சிற்பரன தாகுமுன் பொற்பதம தேதொழு
தற்கரிய ராகவிங் -- கலைவோமோ?
திக்கதில ராமெமை பற்றுவினை நீறியுன்
சிற்றடிய தேயடை -- வரமீயாய்
வெற்றியவை சேரிட மிக்குயரு மாறுபு
விக்கணரு ளேபொழி -- திருவோனே
வித்தையவை யோடுசொல் விற்பனமு மேயளி
வித்தகவி நாயகப் --பெருமானே.

**தலம் : விநாயகர்** **இடம் : புற்றாளை**

தத்தன தனதன — தனதான
கைப்பிடி மலரது வைத்தநு தினமதும்
கற்பக னுனதடி -- தொழுவேதான்
கைக்கொழு பணியவை முற்றுற அருளினை
கச்சித முடனளி -- முதல்வோனே
அப்பனொ டுமையளை சுற்றியம் முனியளி
அக்கனி யதையடை -- திறலோனே
அச்சம தளிவினை அற்றற யுனையழை
அக்கண மருளினை — பொழிவோனே
திப்பிய மளியுன பொற்பத மதையுள
திட்பம தொடுதொழ -- அறியாதே
திக்கலை புலையனை தெற்றென உனையறி
தெட்பமொ டடிபெற -- அருளாயோ?
செப்பரி யருளினை சிற்றுத லறவளி
சிற்பர னெனவடி — யவரோத
சிற்குண மதைநனி இப்புவி தரவெம
புற்றளை யினிலுறை -- பெருமானே

**தலம் : பூதராயர்** **இடம் ஏழாலை**

தானான தான தான -- தனதான
நீராடி காலை நாளும் நேரார லாத பாதம்

நேசாதி யோடு தாழ -- பெருவாழ்வே
நீணாள தோடு பாரி லேகாணு மாறு நாத
நீவார மாகி ஈயு -- புகழோனே
வாரதி யோடு பால னாராதி வேளை காலன்
பாசாதி யேவ நீயும் -- பரிவோடே
வாணாளும் தாளை நாடி வானோரும் தாழ நீடு
வாழ்மாறு வாரி யேதந் -- தருளீசா
ஆராத காத லோடு பாதாதி யேதொ ழாது
ஆசாதி யோடு நாளு -- மலைநாயேன்
ஆராதி பேறி னோடு பாராதி யாசை நீறி
ஆதியுன் தாளை சேர -- அருளாயோ?
ஏரேறி தேவி யோடு ஏலாமை நீற வாரும்
ஈசாதி யாக வோது – சிவனாரே
ஏழாலை பூத ராய ராயேயெம் ஊரர் பேச
ஏகாதி யாக வாழு -- பெருமானே.

**தலம் : சுட்டிபுர அம்மன்** **இடம் : சுட்டிபுரம்**

தத்ததன தானான -- தனதான
சிக்கதென வேதாளை பக்தியுட னேதாழ்
சிக்கலவை யேநீறி -- பெருவாழ்வே
சித்தியரு ளோஈயு சித்தமுள தாயாக
செப்புபுக ழோடாளு ... மருளாழி
இக்கதென வேநாடு பக்தருள மேதேடு
மிச்சையவை யேவாரி ... யளிதேவி
இச்சகம தேசேரி டுக்கணவை யேபாறி
எட்டவரி வாழ்வேதந் ... தெமையாள்வோய்
பொக்கவினை யேயாடி மிக்கருளை யேவாரு
பொக்கிஷம தாகடி ... துதியாதேன்
பொற்கழலை யேநாளும் மிக்கபரி வோடோதும்
பொற்பதுறு மாறேவந் ... தருளாயோ?
சொர்க்கமது வேசேரு நற்கருணை யேயீயு
சொத்ததென வேகாவல் ... தருதாயே
சொக்கரிட மேவாழு தத்தையென வேயோத
சுட்டிபுர மேவாழு ... முமையாளே.

**தலம் : முத்துமாரி அம்பாள் இடம் : திருநெல்வேலி**

தானதன தானதத்த ... தனதான
ஏதிலரு மேநினைத்து னீறிலடி யேவிடுத்த
ஏடணைக ளேயளித்து ... வருதாயே
ஏழையெமை யேவருத்து ஏழமையெ லாமொடுக்கி
ஏறதென வேயிருக்கு ... மருளீவோய்
மேதினியு ளோர்தழைக்கு மேதகைய தேகிடைக்க
மேகமென வாரிநிற்கு ... மலைவாழ்வே
மேனியதை யேதகிக்கு நோயவைக ளேதணிக்க
மேவியிலை யேயுகுத்து ... வருதாயே
வேதனைய தேயளிக்கும் மாவினையி னாலவத்தில்
வீமமுட னேபுவிக்க .... ணலைவேனோ?
வேசறவெ லாமறுத்து வேதவழியே துதித்து
வீடுபெறு மாறெனக்கு ... அருளாயோ?
மாதருள மேயிருக்கு மாசையதெ லாமளிக்கு
மாதுவென வேயுரைக்க ... பரிவோடே
மாதவரெ லாந்துதிக்க வேதிருநெல் வேலிமுத்து
மாரியென வேயிருக்கு ... முமையாளே

**தலம் : அட்டகிரி கந்தசாமி இடம் : நவாலி**

தத்ததன தானன ... தனதான
மிக்குயர்வ தேயளி முற்றவைய ரேபுவி
மெச்சிடந வாலியி ... லுறைநாதா
மித்திரர தாகிடு பத்தருள வாசைகள்
மெத்தமகிழ் வோடருள் – வடிவேலா
திக்கதிர வேபொர முற்படசு ரேவிழ
திட்பவடி வேலினை ... விடுதீரா
சிற்பரனி னாரது ற்செவியி லேயுரை
செப்புதிற மேயுடை ... குருநாதா
துக்கவினை யாலுன பொற்கழல தேதுதி
துப்பதில னாயுல ... கலைவோனோ?
துர்க்குணம தோடிக ழற்புகழ தேதர
சொர்க்கமது கூடிட ... அருள்வாயே
சிக்கதென வேயடி பற்றிடுவ ரேபுவி

சித்திபெற வேசெயு ... குமரோனே
சிட்டரினை யாளிட அக்கறையி னோடெம
அட்டகிரி மேவிடு ... முருகோனே.

**தலம் : விநாயகர்** **இடம் : கல்வளை**

தனதனன தானன ... தனதான
அலமருள மோடுன அடிமலரை நாடிட
அலைதுயர மோடிட .. அருள்நாதா
அகநினைவி னோடெடு கருமவை யேமுடி
அசலனென வேயிரு ... கணநாதா
பலவழியி லேயமர் தொடுகஜமு காசுரன்
பதறிவிழ வேபொரு ... திருவோனே
பரவிமுரு கேதொழ பயிலுவன மாதழ
பகடுருவி னோடெதிர் ... வருவோனே
கலகவினை யேபுவி உலைநிலையி னாலவை
கதுவுபத மேதொழ ... நினையாதே
கயவனென லாவிடு கயமையவை நீறியுன்
கமலபத மேயடை ... வரமீயாய்
குலமதொடு வாழிட குவிநிறைவு காணிட
கொழியருளை வாருகல் ... வளையீசா
குழையுமன தோடுனை குலவிடரை யாளிடு
குருவெனுவி நாயக .. பெருமானே.

**தலம் : பூதவராயர்** **இடம் : சிறுப்பிட்டி**

தானன தான தான ... தனதான
ஏகன னேக னாகி ஈரடி நாடு வாரி
னேடணை யாவு மீயு ... குருநாதா
ஏதில ராக வாழு ஏழமை யோடி யாரு
மேநிறை வாக வாழு ... வரமீவோய்
ஆகம மோது மாறு ஆரடி பூசை ஈவ
ராசையெ லாமு மீயு .. புகழோனே
ஆனன னாகி யாதி வாழிடு மூல மாக
ஆசிக ளீய மேவு ... பெருமானே
கோகய தாளை நாளு மேதுதி யாது வாழு

கோழையெ னாது பாவ ... மவைபோயே
கோவன நாம மோதி தாளிணை வாழு யோகங்
கூடிடு மாறு நீயு ... மருளாயோ?
போகமெ லாமு மீயு தேவென காவ லீயு
பூதிய தாக வோது ... சிவனாயே
பூதல நீரு வேலி மேதினி நீடு வாழ
பூதவ ராயர் கோவி ... லுறைவோனே.

**தலம் : பத்திகாளி** **இடம் : கரவை கிழக்கு**

தான தான தத்த தான ... தனதான
தார தேது ணைக்க தாகு தாள தேறி னைத்து நாளும்
தாழு வாரு எத்து ளாசை ... தருதேவி
தாச ரேத ழைத்து வாழு மாறு மேய ருட்க ணீயு
தாய ளாயு ரைக்க வாழு ... மகமாயி
கோர மாவ சுர்க்கு லாதி மாள வேகு தித்து ஆடு
கோரி யாயு ரைக்க மேவு ... புகழாளே
கோரு மாவ ரத்தி னூடு கோள தீயி டர்க்கள் நீற
கோள ரீயு குத்து ஏறி ... வருதாயே
பார மாவி னைக்கு ளாகி பாத மேது தித்தி டாது
பாவி யாமெ னத்தி னாதி .. யலையாதே
பாவ மேதொ லைக்கு பாசு ராதி யேயி ழைத்து கூடி
பாத மேகி டக்கு ஏமறு .. அருளாயோ?
ஆர வார சித்ர வேலன் சூல பாணி பக்க மாகி
ஆசை யோடு வார வுற்று ... அழகீய
ஆளு வீர பத்ர ரோடு மூல மேவு பத்ர காளி
ஆக வேயி ருக்க மேவு .. முமையாளே

**தலம் : சித்திவிநாயகர்** **இடம் : ஆயாக்கடவை**

தானாத் தனதன ... தனதான
ஆளாக் கிடுமுன தாணாட் தொழுதெழ
வாழ்நாட் திருவொடு ... பெருவாழ்வே
ஆறாட் டிடுவரும் பார்மேற் புரிதம
ஆகூழ்ப் படிபெற ... அருளீசா
தோளாற் றலொடம ரேயாற் றிடவரு

சூரார்க் குலமற ... பொருதீரா
சோராப் பெருவினை சேராத் திருவருள்
பேராற் பெருசிலை ... யருளீசா
மீளாப் பெருநிலை பாரோர்க் கருளடி
மாலாற் பணிநினை ... விலநாயேன்
(மாழாத்) தலதற நாவாற் பகழினை
யேகோத் தடியடை ... வரமீயாய்
தாளாத் தயரொடு சார்வார்க் கருளினை
தார்மேற் பரிவொடு ... தருவோனே
தாயாய்க் கருணையொ டேகாத் தருளிட
ஆயாக் கடவையி ... லுறைவோனே

**தலம் : சித்திவிநாயகர்** **இடம் : ஆயாக்கடவை**

தத்தன தானன ... தனதான
அக்கறை யோடடி நித்தமு மேதொழ
அக்கண மேயரு .. ளளிநாதா
அத்தனை யேவல முற்றடி யாரளி
அக்கனி யேகவர் -- திறலோனே
சொக்கிட வேயக வற்தரு சேயிழை
சொக்கனை யேயடை ... வரமீவோய்
சொத்தென வேயுனை சுற்றமொ டேதொழர்
சொர்க்கம தேபெற ... அருளீசா
மிக்கெழு மாதுய ரைத்தரு மாவினை
மிக்குற வேயடி ... துதியாதே
மிக்கலை வேனது மிச்சைய தோடியுன்
மித்திர னாயடி ... யடையேனோ?
செக்கலி லேதொழர் சித்தம தேயருள்
சிற்பர னாயுல ... கவரோத
சித்தமு ளேதொழ வெற்றிய தேயருள்
சித்திவ நாயக ... பெருமானே.

கணபதி துணை

# பிள்ளையார் கதை

யாழ்ப்பாணத்துச் சுன்னாகம்

அ. வரத பண்டிதர் அருளியது



## வேழமுகம்

வேழமுகத்து விநாயகனைத் தொழ வாழ்வு மிகுத்து வரும்
வெற்றி மிகுத்து வேலவனைத் தொழ புத்தி மிகுத்து வரும்
வெள்ளைக் கொம்பன் விநாயகனைத் தொழ துள்ளி ஓடும்
தொடர்ந்த வினைகள்
அப்ப முப்பழம் அஜது செய்தருளிய தொப்பையப்பனைத்
தொழ வினை யறுமே.

அல்லல்போம் வல்வினைபோம் அன்னை வயிற்றிற் பிறந்த
தொல்லைபோம் போகாத் துயரம் போம், நல்
குணமதிக மாமருணைக் கோபுரத்துள் மேவும்
கணபதியைக் கைதொழுதக் கால்.

– விவேக சிந்தாமணி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தினிளம் பிறை போலு மெயிற்றினை
நந்தி மகன் றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

– திருமந்திரம்

# பிள்ளையார் கதை

## சிறப்புப் பாயிரம்

செந்தமிழ் முனிவன் செப்பிய காதையுங்
கந்த புராணக் கதையில் உள்ளதுவம்
இலிங்க புராணத்து இருந்தநற் கதையும்
உபதேச காண்டத்து உரைத்தநற் கதையும்
தேர்ந்தெடுத்து ஒன்றாய்த் திரட்டிஐங் கரற்கு
வாய்ந்தநல் விரத மான்மியம் உரைத்தான்
கன்னியங் கமுகிற் கயலினங் குதிக்குந்
துன்னிய வள்வயற் சுன்னா கத்தோன்
அரங்க நாதன் அளித்தருள் புதல்வன்
திரம்பெறு முருகனைத் தினந்தொறும்
வரம்பெற வணங்கும் வரதபண் டிதனே.

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும் அரன்றாள் ஈன்றருளும் மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீஎன்றும் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனைமுகத்தானைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன்மனதில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வாராது கூற்று.

## சப்பாணி

எள்ளுப் பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக் கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும், பலாப்பழமும்,
வெள்ளைப் பாலும், மோகமும் விரும்பிப் படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.

சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி,
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே,
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணயற்ற பேரொளி வீசக்,
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளை நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடைஉடையாளே மூவுலகுந்தொழுது எத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல்இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தந் தனில்நீ இருந்து திருவருள் செய்திடு வாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கம் புனற்சொறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரிமுகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால் தெளிவுறச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரிறபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.

## நூல்

மந்திர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரில்

அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு பரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளின்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவன் அடி வணங்கிப்

பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவர்க்கு அருள்புரிந்து அருளென
அந்தஅந் தணனுக்கு இந்தநற் பிறப்பில்
மைந்தரில் லைஎன்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரிசு ஆயினும் எம்பொருட்டு ஒருசுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமைஆ ளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்

பேதாய் நீபோய்ப் பிறவென மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடும் மானிடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்குநீ பிள்ளையாகச்
சென்று அவன் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல்செய்து அருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கன்மா மகளும்
பெடைமயிற் சாயற் பெண்மக வாகித்

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்தபின் அன்னையும் அத்தனும்

மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பு இறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான்என

மற்றவன் தன்னைஉன் மணமக னாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்துஅவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யான்எனக்
கருந்தட நெடுங்கண் கவரிஅங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகிற்
தருமலி நிழல்தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல்உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன்அருந்தவம் அறிவோம் யான்என
இருவரும் அறியா இமையவர் பெருமான்

மான்இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறையவன் ஆகிக்
குடையொடு தண்டுநற் குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல்தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லிய லாய்நீ
என்பெறத் தவம்இங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றைவார் சடையனைக் கூடஎன்று உரைத்தலும்
நன்றுஎனச் சிரித்து நான்மறை யோனும்

மாட்டினில் ஏறி மான்மழு தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்
பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்துத லையோடு ஏந்திப்
பிச்சைகொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சிநீர் செய்தவன் நகைதரு நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்குஅவள் நாணமுற்று அணிமனை புகுதச்

சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனம்மிகத் தேற்றிச்

சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தைதாய் இருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்துஒரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடுஅலர் கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்கென
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீஎழுந்து அருள்என
மைமலர்க் குழலி வந்து எனை அழைக்கில்
அம்மனைப் புகுவன்என்று அந்தணன் உரைத்தலும்

பொற்றொடி நீபோய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவு உடையோன்
அவனையான் சென்றுஇங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறின ளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான்வெளிப் படுவ தில்லைஎன்று இசைப்ப

மனையிடை வந்த மாமுனி தன்னை
இணைஅடி தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து
தாய்சொல் மறுத்தல் பாவம்என்று அஞ்சி
ஆயிழை தானும் அவன்எதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன்என்று எண்ணி

ஆசனம் நல்கி அருக்கிய முதலாப்
பாதபூ சனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன்கத லிப்பழஞ் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோ லத்தொடு சாதிக் காயும்
கற்பூரச் தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்

ஒள்ளிய தட்டில் உவந்துமுன் வைத்துச்
சிவன்எனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேன்அமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமா முனிபுன் முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவுங் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்

கரந்ததன் உருவங் காட்டிமுன் நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடுஅங் குஅவன்அடி வீழ்ந்துஇறைஞ் சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்
பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகைக்கந் தருவர்கள் முதலாய்க்
கணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்

மன்றல்அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல்வந்து இலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக் கத்தால் வளைபல பரப்பி

ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பத்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில்விதா னித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறுந் திருவிளக்கு ஏற்றிப்

பத்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கமுதுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர்சோ டித்து
நலமிகு கைவலோர் நஞ்சுஅணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரா னையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடல்என விளங்குங் காவணந் தன்னிற்

சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையின்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்துஉட னிருத்திப்
பறைஒலி யோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து
பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவைதன் னுடனே

ஓதநீர் வேலைசூழ் உஞ்சை அம்பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீஎன
வரும்கருங் குழலாள் மற்றும்உண் டோஎனத்
திருந்துஇழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியும் கலந்துவிளை யாடல்கண்டு
ஒளிர்மணி பூணாள் உரவோன் உடனே

அவ்வகை அரனும் அதற்குஉடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக

மதர்விழி உமைபிடி வடிவம தாகிக்
கூடிய கலவியில் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்விவேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக் கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந்துவர் வாயுந்

தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடிசூ ரியர்போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனகநீண் முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்துஅவ தரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்துஉடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்தநான் முகனும்

மண்ணு ளோர்களும் வந்துஉனை வணங்க
ஆங்குஅவர் தங்கட்கு அருள்சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதிரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்துஇனிது இருந்தபின்
வானவ ராலும் மானுட ராலுங்

கான்அமர் கொடிய கடுவிலங் காலுங்
கருவிக ளாலுங் கால னாலும்
ஒருவகை யாலும் உயிர்அழி யாமல்
திரம்பெற மாதவஞ் செய்துமுன் னாளில்
வரம்பெறு கின்ற வலிமையி னாலே
ஐமுகச் சீயமொத்து அடற்படை சூழக்
கைமுகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமைகண்டு ஏங்கி

அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்றுஅவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனொடு அவன்தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்றுவா என்று விடைகொடுத்து அருள
ஆங்குஅவன் தன்னோடு அமர்பல உடற்றிப்

பாங்குறும் அவன்படை பற்றுஅறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்
கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றை வெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்துஅவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்தமூ டிகமாய் வந்துஅவன் பொரவே
வந்த முடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
ஏறிந்தவெண் மருப்புஅங்கு இமைநொடி அளவிற்

செறிந்தது மற்றவன் திருக்கரத் தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனைஎன மணந்தே

ஓகையோடு எழுந்துஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும்வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல்கமுகு ஏறுந்
திருச்செங் காட்டிற் சிவனைஅர்ச் சித்துக்
கணபதீச் சரம்எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்குஉண் டாக்கிக்
சங்கரன் பார்ப்பதி தனிமனம் மகிழ

இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமைபெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர்கந் தருவர்
யாவரும் வந்துஇவண் ஏவல்செய் திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகர்க்கு உரிய விரதம் என்றுஎண்ணி
மனாதிகள் கழித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்

ஒப்பரும் விரதத்து உறும்ஒரு சதுர்த்தியில்
நோற்றுநற் பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றிசெய் திட்டார் புலவர் ஐங்கரனை
மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவரும் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்தகாத் திரமும்
தாழ்துளைக் கையுந் தழைமுறச் செவியுங்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளுங்

கொண்டனன் சீற்றங் குபேரனை நோக்கி
என்னைக் கண்டுஇங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும்இத் தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும்எய் துவரென்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்

கண்ணருள் கூருங் கடவுள்இத் தினத்திற்
கோரவெஞ் சினம்மிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று

இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகைஇனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத் துதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுகம் நோக்கி
எண்ணிய விரதம் இடையூறு இன்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண்டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்

எந்தத் தெய்வம் எவ்விர தத்தை
வந்தனை செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீரனக் கிளர்த்துதல் உற்றான்
அக்குநீ றணியும் அரன்முதல் அளித்தோன்
விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புயம் உடையோன்

சர்வ ஆபரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோல் ஒருமருப்பு உடையோன்
ஒருகையிற் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறுநினை வின்படி
சித்திசெய் வதனாற் சித்திவி நாயகன்
என்றுஇமை யவரும் யாவருந் துதிப்ப
நன்றி தருந்திரு நாமம் படைத்தோன்
புரவலர் காணப் புறப்படும் போதுஞ்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்

வித்தியா ரம்பம் விரும்பிடும் போதும்
உத்தியோ கங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்குஅவன் தன்னை அருச்சனை புரிந்தால்
தீங்குஉறாது எல்லாஞ் செயம் உண் டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதம்ஒன் றுஉளதுஅதை விரும்புநோற் றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பத்து உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தம்மையும் வென்றிடலாம்எனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு

நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசைசெய் விதமும்
விரித்துஎமக்கு உரைத்திட வேண்டும் என்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துஉரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறைநீர் படிந்து
சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பக்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்

வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன்றன்
ஒள்ளிய அருள்திரு உருஉண் டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலும் தகுமால்
பூசைசெய் திடும்இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகங் கோசிகங் கொடிவிதா னித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகன் உருவைச்
சிந்தையின் நினைத்து தியானம் பண்ணி

ஆவா கனமுதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம்வரை கொடுத்து
ஐந்து அமிர் தத்தால் அபிடே கித்துக்

கந்தஞ் சாத்திக் கணேசமந் திரத்தால்
ஈசுர புத்திரன் என்னுமந் திரத்தால்
மாசுஅகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்துஉமை சுதனாப் புகலுமந் திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகு உடன்திரு பத்தொரு விதமாப்
பத்தர புட்பம் பலபல கொணர்ந்தே

உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசஅங் குசகரன்
ஏக தந்தன் ஈசுரன் புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வகா ரியமுந் தந்துஅருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும்நா மங்களால்
ஆரம் பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற்பணி காரந்
தீதகல் மாங்கனி தீங்கத லிப்பழம்
வருக்கை கபித்த மாதுளங் கனியோடு

தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும்முன் வைத்து
உருத்திரம் பிரியஎன்று உரைக்கும்மந் திரத்தால்
நிருத்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்றநா னான்குஉப சாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண்அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தனம் முத்துத் தானந் தக்கிணை

அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருஉரு வத்தைத்
தரித்தவத் திரத்துடன் தானமாகக் கொடுத்து
நைமித் திகம்என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர்செய் தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்

திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன்இவன் தன்னைமுன் அர்ச்சனை பண்ணிப்
புரம்ஒரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி

விருத்திரா சுரனை வென்றுகொன் றிட்டான்
அகலிகை இவன் தாள் அர்ச்சனை பண்ணி
பகர்தருங் கணவனைப் பரிவுடன் அடைந்தாள்
தண்ஆர் மதிமுகத் தாள்தம யந்தி
அன்னாள் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவும் நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேர்அறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை

மகிதலந் தன்னில் மலர்கொடு அர்ச் சித்து
வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்டதே வதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபா லன்றான்
கொண்டுபோம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டுபாண் மிழற்றா மலர்கொடு அர்ச் சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும்அங்கு அவளை இன்புறப் பெற்றோம்

புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விழைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச் சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்றுகற்று எறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்துகட் புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்
சிந்தையில் நினைந்தவை செகத்தினிற் செயங்கொண்டு

அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்
ஈங்குஇது நிற்க இவ்விர தத்துஇயல்
ஓங்கிய காதைமற்று ஒன்றுஉரை செய்வாம்
கஞ்சநான் முகன்தருங் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயைதன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அளித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறிநடத் துதலால்

ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீஇரங்கு எமக்குஎன நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி
வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்என
அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமர வேல்விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்

ஓடிய வானோர் ஒருங்கு உடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர்அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள்என்று அஞ்சிப்
பாவகன் பயமுறப் பயம்உனக்கு ஏதென
உற்றிடுங் கரதலத்து உன்னையே தரித்தான்
வெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றமடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்

தானும்அச் சபையில் தரியாது ஏகி
எமைஆ ளுடைய உமையா ளுடனே
அமையா இன்பத்து அமர்ந்துஇனிது இருந்த

பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கிநா ணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
அறுமுகப் பிள்ளையை அவன்கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்க்கையிற் கொடுப்ப

நீதி யோடு நின்றுகை யேந்திப்
போதநீள் வாயுவும் பொறுக்கஒண் ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையிற் கொடுப்பத்
தரும்புனற் கங்கையும் தாங்க ஒண்ணாமற்
பெருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்
தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண்ஆ றிரண்டுங் கரம்ஈ ராறும்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண்அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்

மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்திர்என்று அனுப்ப
ஆங்கவர் முலைஉண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையு கந்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகஅலர் குழல்உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்துஎடுத்து அணைத்துத்
தேவர்தம் படைக்குச் சேனா பதியெனக்
காவல் கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி

அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசைஎலாஞ் செல்லுந் தேரும்ஒன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய்நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடுஎன்று அனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்

குருகுப் பேர்பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு

அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமரவேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி
மாதொரு பாகனை வந்துஅடி வணங்கி
மருமலர்க் கடம்பன்எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும்நீ அம்பிகா பதியென

இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்திமுன் நின்ற மங்கையைப் பார்த்து
மங்கை நீதான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்

புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காணஅங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ்உமை யான்வென் றேனென
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவரும் சாட்சி இவனைக் கேட்ப

மாமனை வதைத்த மான்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரிஅங்கு உருத்து
நோக்கிநீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாள்
மைக்கரி உரித்தோன் வதனம் நோக்கிப்
பொய்க்கரி உரைத்த புன்மையி னாலே

கனல்என வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள்வீற்று இருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில்நிறத்து உருப்போய்த்
துளவஅணி மருமனுந் துணைவிழி இழந்தே
ஆண்டுஅரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல்வீற்று இருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தன்னால்

திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத் தின்கீழ் இருந்தான்
கம்பமா முகத்துக் கடவுள்தன் பெருமையை
அம்புவி யோருக்கு அறிவிப் போம்என
உம்பர் உலகத்து ஓரெழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகை கழிந்தபின் நாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத் தோர்இழை இன்புறக் காட்டி
ஒருபோது உண்டி உண்டுஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதிவி நாயகற்கு ஆன எழுத்தும்

மூன்றுஎழுத் ததனால் மொழிந்தமந் திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசா ரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றநாள் ஐங்கர மாமுகன் பிறந்த

அற்றைநாட் சதயமும் ஆறாம் பக்கமுஞ்
சேரும்அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக்கு ஏற்றிக்
குலவுபொற் கலைகள் கொடுவி தானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கோலைபுரி வடிவேற் குகற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நல்நூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்

செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருந்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ்இரு வாட்சி
தாமரை முல்லை தளைஅவிழ் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்புசெவ் வந்தி
வாய்ந்தநல் எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்

தூபதீ பங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல்எள் ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
சீனிதேன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி

நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும்நோற் பேனென

ஆங்குஅவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடுஇவ் விரதம் பரிந்துநோற் பித்தார்
அண்டர்நா யகனாம் ஐங்கரன் அருளால்
விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்ஞைமா நகர்புகுந்து உமையொடு விமலன்
கஞ்சநாண் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யான்இடுஞ் சாபம் நீங்கியது ஏனென
மாநெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப

இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப்பிள்ளைஅன்று எனக்குத்
தந்துஅருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொற்றாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாஶ்ரீ
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுமை அடைந்த வன்தாழ் நீக்கி
ம
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையா னதுஎனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ்சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருந்திநோற் பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்

குறமட மகளைக் குலமணம் புணர்ந்தோன்
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்த்து
தாதுமை வண்டுமுந் தாமத் தானனை
மாதுமை யாளை வந்துகண் டனனே
கண்ணநீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்
தண்ணறுங் குழல்உமை சாபம் இட் டதுவும்
அக்குநீறு அணியும் அரன்முதல் அளித்த
விக்கன விநாயக விரதம்நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துத் துளவ மாலையன்
விடர்ப்பணி உருவம் விட்டுநீங் கியதும்

பரிவுகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரிஅன்று அடைத்த கபாடந் திறந்ததும்
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விர தத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்ந்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து

தடமுலைத் திலோத்தமை தனைமணம் புணர்ந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடுஇவ் விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்கிரமா தித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்தஅன் புடன்இவ் விரதம்நோற் பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்

சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரியை அவிழ்த்து

வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்குஅது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச்சிறை இருந்த
பூப்பயில் குழல்சேர் பொற்றொடி ஒருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி

இழையது கிடப்பக் கண்டுஅவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதைகைக் கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவளுக்கு அருளக்
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிரமா தித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிர மானஉடை மணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புந் தாளினின்று ஒலிப்பக்

கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கும் மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரணமாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு

இமைப்பொழுது இவள்இங்கு இருக்கலா காதுஎன
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனை புகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலியகல் லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர்தம் மனையில் உற்றுஅவள் இருப்ப

வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்
குயக்கலம் உடைந்து கொள்ளை போக

அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய தாக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகள் எல்லாந் துணிந்துவே றாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் பாவிநீ தான்யார் என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்

அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டுதன் அகமதிற் சென்று
இவ்வகைக் கன்னிநீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லுவிக் கிரம சூரியன் மனையெனச்

சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம்மெழு கிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மான்நேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரைமெழுக் கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்
புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்

புத்தகம் பாம்பாய்ப் பொருந்திநின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்துஅவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருத்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பக் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்துமுன் அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்புநோற் றிடுகெனக்

கரத்து மூஏழுஇழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் பாம்பழ பண்டமுஞ்
செப்பம தாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகாவிர தத்தை
வித்தக மாக விளங்குஇழை நோற்றுக்
கற்பக நம்பி கருணைபெற்றதன் பின்
சக்கர வாள சைனியத் தோடு
விக்கிரமா தித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி

எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருளெனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்ணீர்க் கரகமும் ஒருபணி காரமும்
பண்ணேர் மொழியார் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்

அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தானது தொலையாத் தன்மையைக் கண்டே

இவ்வகை சமைத்தநீ யாரென வினவ
மவ்வலங் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசர்க் உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண்இது
குணமுடை இவள்உன் குலமனை யாட்டி
இலக்கண சுந்தரி என்றுஅவ்வை கூற
மங்கையை நோக்கி மனமிக மகிழ்ந்து

திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்டொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்றுஅடி பணியச்
சுந்தரி யிருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## காப்பு

கரும்பும் இளநீருங் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன்மேல் – அருந்திக்
குணமுடைய னாய்வந்து குற்றங்கள் தீர்க்குங்
கணபதியே இக்கதைக்கு காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவதனில் ஏறி
வரும்அரன்றாள் ஈன்றருளு மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத்தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்து அணுகும் – உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.

பொற்பனைக்கை முக்கண் புகர்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் – சொற்பெருகக்

கற்றவரும் நோற்றவரும் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
நோற்றார் மிகமகிழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர்க்கும் வாராது கேடு.

சூலிலால் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் – மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

*பிள்ளையார் கதை முற்றுப்பெற்றது.*

திருச்சிற்றம்பலம்

ஔவையார் அருளிய

# விநாயகர் அகவல்

சீதக் களபச் செந்தா மரைப் பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரைஞாணும் பூந்துகில் ஆடையும்
வன்ன மருங்கில் வளர்ந்து அழகுஎறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விளங்கு சிந்தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சில் குடி கொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்கு பொன்முடியும்
திரண்ட முப்புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதம் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் ஈன்ற கற்பகக் களிறே

முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுது என்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தான் எழுந்தருளி
மாயாப் பிறவி மயக்கம் அறுத்தே
திருந்திய முதல் ஐந்தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனில் புகுந்து
குருவடி வாகிக் குவலயம் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக்கு அருளிக்
கருவிகள் ஒடுங்கும் கருத்தினை அறிவித்(து)
இருவினை தன்னை அறுத்து இருள் கடிந்து
தலம்ஒரு நான்குந் தந்தெனக் கருளி
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந்திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்கிசை நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடை பிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையில் சுழுமுனைக் கபாலமும் காட்டி,
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்று எழுபாம்பின் நாவில் உணர்த்திக்,
குண்டலி அதனில் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால்  எழுப்பும் கருத்தறிவித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்
குமுத சகாயன் குணத்தையும் கூறி
இடைச் சக்கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக்கரத்தின் உறுப்பையும் காட்டிச்,
சண்முக தூலமும் சதுர்முகச் சூக்கமும்
எண்முகமாக இனிதெனக்கு அருளிப், ,,

புரியப்பட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினில் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக்கு அருளி,
என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுக்கு ஒன்றிடம் என்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்தி என் செவியில்
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்,
சத்தத்தின் உள்ளே சதாசிவம் காட்டிச்,
சித்தத்தின் உள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி,
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறி வித்துத்
தத்துவ நிலையைத் தந்து எனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

*விநாயகர் அகவல் முற்றிற்று.*

## விநாயகர் அகவல் பிறந்த கதை

"சீதக் களபச் செந்தாமரைப் பூம்பாதச் சிலம்பு" என்று ஔவையார் பாடிய விநாயகர் அகவலைச் சீர்காழி கோவிந்தராஜன் பாடக் கேட்டிருப்பீர்கள். தித்திக்கும் தேவகானம் அது. இந்த அகவலில் சில வார்த்தைகள் நமக்குப் புரியாது. ஆனால் விநாயகருக்கு மிகவும் பிடித்த பாடல் இது. விநாயகரே ஔவையார் முன் நேரில் தோன்றி அவரைப் பாடும்படி சொல்லி, தலையாட்டிக் கேட்ட பாடல் இது.

திருமாக்கோதை என்னும் சேரமான்பெருமாள் மன்னர், சுந்தரமூர்த்தி நாயனாருக்கு நெருங்கிய நண்பர். ஒருநாள் சுந்தரமூர்த்தி சுவாமிகள் இல்லறம்

வெறுத்து, கைலாயம் செல்ல எண்ணி, சிவபெருமானைப் புகழ்ந்து பாடிக்கொண்டிருந்தார். சிவன் அவரைக் கைலாயத்துக்கு அழைத்துச் செல்ல ஐராவதம் எனும் தேவலோக யானையையும் தேவர்களையும் அனுப்பினார். சுந்தரரும் யானை மீது கிளம்பி விட்டார். அப்போது வெளியில் சென்றிருந்த சேரமான் பெருமாள் வானத்தில் இந்த அதிசயத்தைப் பார்த்தார். அவருக்கு சுந்தரரைப் பிரிய மனமில்லை. எனவே, தன் குதிரையில் ஏறிய அவர், அதன் காதில் "சிவாயநம" என்னும் பஞ்சாட்சர மந்திரத்தை ஓதினார். உடனே குதிரையும் கைலாயத்தை நோக்கிப் பறந்தது. இதையறிந்த மன்னரின் படைத்தலைவர்கள் அவரைப் பிரிய மனமின்றி தங்களைத் தாங்களே மாய்த்துக் கொண்டனர். அவர்களது உயிரும் கைலாயத்தை நோக்கிப் பறந்தது.

இப்படிச் சென்ற சுந்தரரும் சேரமான் பெருமாளும் கீழ்நோக்கிப் பார்த்தனர். ஓரிடத்தில் ஔவையார் விநாயகர் பூசையில் இருப்பதைக் கண்டு "நீயும் வாயேன் பாட்டி" என்று அழைத்தனர். பூஜையை முடித்துவிட்டு வருகிறேன் என்று ஔவைப்பாட்டி பதிலளித்தாள். அப்போது விநாயகர் ஔவையார் முன் தோன்றி "நீயும் கைலாயம் போகவேண்டுமா"? என்றார்.

நீ இருக்கும் இடமும் உன்னைப் பூஜிக்கும் இடமுமே எனக்கு கைலாயம் போலத்தான். நீ விருப்பப்பட்டால் என்னைக் கைலாயத்துக்குக் கொண்டு போ என்றார் ஔவையார்.

"ஔவையே நீ குழந்தைகளுக்காக நிறையப் பாடியிருக்கிறாய். தெய்வக் குழந்தையான என்னைப் பற்றி ஒரு பாட்டுப் பாடு என்றதும் "சீதளக் களப" என ஆரம்பிக்கும் அகவலைப் பாடினார். பாடி முடித்ததும் விநாயகர் மகிழ்ச்சியில் அவளைத் தும்பிக்கையால் தூக்கி சுந்தரரும் சேரமான் பெருமாள் நாயனாரும் கையலாயம் சென்று சேர்வதற்கு முன்பாகவே கொண்டு சேர்த்துவிட்டார்.

கைலாயத்தை அடைந்த பிறகு ஔவையாரை சுந்தரரும் சேரமான் பெருமாளும் ஆச்சரியப்பட்டு நடந்த விவரத்தைக் கேட்டனர். விநாயகர் முதற் கடவுள். அவரை வணங்குவோர் எல்லாவற்றிலும் முதல்நிலையில் தான் இருப்பார்கள் என்றாள் ஔவை. இப்படிப்பிறந்தது தான் விநாயகர் அகவல் என்னும் தேன்தமிழ்ப் பாடல்.

நாயேன் பல பிழைகள் செய்து களைத்து உனை நாடி வந்தேன்
நீயே சரணம் நினதருளே சரணம் சரணம் விநாயகா.

# இரவீந்திரநாத் தாகூரின் நோபல் பரிசுபெற்ற கீதாஞ்சலி

**மொழிபெயர்ப்பு : பூ. சோதிநாதன்**

**மேலும் நான் இரக்கின்றேனே!**

ஆண்டவா நீயோ என்னை
ஆக்கினாய் – அழிவே இன்றி
ஈண்டு நின் விருப்பும் அஃதே
இந்தமட் பாண்டம் தன்னை
மீண்டுநீ வெறுமை ஆக்கி
மிகமிகக் காலி செய்தே
பூண்டுகொள் என்றே என்னைப்
புத்துயிர் நிறைக்கின் றாயே

உனதுகை சிறிய தான
இச்சிறு குழலை ஏந்தி
வனப்புறு காடும் காவும்
மலையெலாம் கடக்கின்றாயே
நினதுபோம் பாதை எல்லாம்
நெகிழஇக் குழலை ஊதி
அனவர தமுமே கீதம்
அமுதமாய்ச் சொரிகின் றாயே
வரமதே அளிக்கும் வள்ளல்
மாயநின் கரமே தீண்டில்
சரானமாய் எந்தன் உள்ளம்
சகலமும் தாண்டி அன்பால்
பரமநின் வண்மை தன்னைப்
பாடிடப் போகும் போதே
வரமெனப் பலவும் தந்து
வழங்குவாய் வழங்கு வாயே

அகமகிழ்ந்து திடுவேன் என்றே
ஆண்டுகள் பலவாய் எந்தன்
மிகச்சிறு கையும் கொள்ள
விரும்பிய வாறு தந்தும்
யுகயுக மாக இந்த
அடியவன் ஆசை மீறி
மிகமிக இன்னும் வேண்டி
மேலும்நான் இரக்கின் றேனே

**பிரபு தன்னை நண்பனாகக் கொள்கின்றேன்**

நீயெனைப் பாட வேண்டி
நினைத்திடும் போதே இன்பம்
போயென துள்ளம் ஓங்கிப்
பொதுக்கென வெடிக்கும் அன்றே
சேயென திந்த இன்பம்
திளைப்பஉன் முகமே நோக்க
ஏயுமென் கண்கள் தாரை
என்றிடச் சொரியும் அன்றே
என்னது துன்பம் அல்லல்
இவையெலாம் இழைந்தே ஒன்றாய்
இன்னதோ என்று சொல்லி
இயம்பிட முடியா வாறும்
அன்னதோர் இசைவாய்த் தோன்றும்
அதுவுமுன் அருளே என்னைப்
பன்னரும் கடலைத் தாண்டும்
பட்சியைப் போல்வன் அன்றோ

அடியனின் பாடல் தன்னால்
ஐயனே மகிழ்வாய் என்று
படிதனில் அறிவன் யானே
பகவநின் இருக்கை முன்னால்

அடியவன் வந்து நிற்பேன்
அதுவுமோர் பாட்டுப் பாடும்
படியதாய் மட்டும் என்றே
பணிவுடன் அறிவேன் யானே

உன்னது பாதம் தன்னை
உற்றிட முடியா தென்பர்
அன்னதோ உயர்ந்தே நிற்கும்
ஆயினும் எந்தன் பாடல்
வன்னமே சிறக தாக
வலையெனப் பரப்பி உந்தன்

சொன்னமாம் பாதத் தெல்லை
தொடுகிறேன் தொடுகின் றேனே

பாடலால் ஆனந் தத்தைப்
பருகிடும் மகிழ்ச்சி பொங்கத்
தேடவும் முடியா நின்ற
சிறுக்கனாம் என்னை அந்தப்
பாடலால் மறந்து போவேன்
பான்மையம் மறதி யாலே
கூடவும் பிரபு தன்னைக்
கொள்கிறேன் நண்பன் ஆக.

## பரமபதம் அடைந்த நல்லை ஆதீன முதல்வர்



ஓவியர் : ச. பெனடிக்ற்

# உண்டேன்

**ஔவையார்**

ஒரு சொல்லைச் சாமர்த்தியமாகவும், நகைச்சுவைபடவும் சொல்வதில் ஔவை யார் வல்லவர். அவருடைய பாடல் அமிழ்தினும் இனிமையாகத் தித்திக்கும்.

ஔவையார் அக்காலத்தில் கால் நடையாகவே நடந்து பலப்பல அரசர் களையும், தனவந்தர்களையும் பார்த்து அவரவர்கட்கு அரிய அறிவுரைகளைக் கூறி நல்வழிப்படுத்தி வந்தார். அவருடைய புகழ் எங்கெங்கும் பரவியிருந்தது. அவரை மூவேந்தரும் புகழ்ந்தார்கள் பாராட்டி னார்கள். மாவேந்தரும் மகிழ்ந்தார்கள்.

ஔவையாருடைய பாடல்கள் அள வற்ற பெருமையுடையனவாகத் திகழ்ந்தன. அவரால் பாடப்பெறுவதைத் தங்கள் பெரும் பேறாக எண்ணினார்கள். அவரை அனை வரும் வரவேற்றுப் புகழ்ந்து உபசரித்தார்கள். எங்கும் அவருக்குப் பாராட்டுதலும் சீராட்டு தலும் இருந்தன. அம்மையார் ஆங்காங்கு தாம் கண்ட காட்சிகளை அழகாகவும் சுவையாகவும் பாடுவார்.

ஒரு சமயம் ஔவையார் மதுரை யில் பாண்டிய மன்னனுடைய திருமணத் திற்குச் சென்றனர். திருமண விழாவில் அளவிறந்த கூட்டம் வருவாரும் போவாரும் அதிகம்.

ஔவையார் மிகவும் எளிமையாக இருப்பவர். ஆடம்பரத்தை அறவே வெறுத் தவர். எளிமையான உடை உடுத்தியிருந்த ஔவையாரை அரண்மனைக் காவலர்கள் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். அங்குள்ளவரும் அவரை இன்ன... என்று அறிந்தார்கள் இல்லை. உடையால் அவருக்கு உள்ளே செல்ல வந்தது தடை.

உலகம் உடையின் உயர்வைக் கண்டு மதிக்கின்றது உள்ளத்தின் உயர்வை உன்னுவதில்லை.

சிவபெருமான் தோலாடையுடுப்பவர்
திருமால் பட்டாடையுடுப்பவர்
பாற்கடல் என்ன செய்தது தெரியுமா?
அதுகூட ஆடம்பரத்தை விரும்புகின்றது
தோலாடை யுடுக்கும் சிவனாருக்கு
ஆலால் விடத்தை அளித்தது.

பட்டாடையுடுக்கும் பரந்தாமனுக்குத் தனது மகள் இலக்குமி தேவியை ஈந்தது. ஆதலால் சிறந்த ஆடையில்லாதவர்கள் ஒரு பெரிய சபைக்குச் சென்றால் அவர்கள் எத்தனைதான் கற்றிருந்தாலும் அவர்களை அந்த அவையோர்கள் நன்கு மதிப்பதில்லை. இந்தக் கருத்தை நையாண்டிப் புலவர் நவில்கின்றார்.

**"மேலாடை இன்றிச் சபை புகுந்தால் இந்த மேதினியோர்**
**நூலாயிரம் படித்தாலும் எண்ணார், நுவல் பாற்கடலோ**
**மாலா னவரணி பொன்னாடைகண்டு மகளைத் தந்தே**
**ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன் தனக்கே".**

"ஆடையுடையான் அவைக் கஞ்சான்" என்ற பழமொழியும் இது குறித்து எழுந்தது.

ஒருவன் திருமண வீடு, கோயில், அரசாங்க சபை, புகைவண்டி முதலிய இடங்கள் எங்கு சென்றாலும் நல்ல பகட்டான ஆடையிருந்தால் முதலிடம் பெறுகின்றான். இன்றேல் ஒதுக்கிடம் பெறுகின்றான்.

இது குறித்து இராமலிங்க அடிகளார் இரு பாடல் பாடியுள்ளார்.

அழுக்குத் துணியுடுத்தியிருந்தால் நேரில் பார்த்தும் பாராதவர்களைப் போல் உலகோர் இருப்பர். ஒருவித உதவியும் புரியார். அந்தோ! பட்டு உடுத்தியிருந்தால் "ஓ! வாருங்கள்! ஏன் அங்கேயே நிற்கின் றீர்கள்? சும்மா உள்ளே வாருங்கள் வாருங்கள்' என்று கூறி உபசரிப்பார்கள்.

சரிகைக் கரையிட்ட உயர்ந்த ஆடையை யுடுத்தியிருந்தால் பார்த்தவுடன் "ஐயா! வணக்கம் தங்கள் பெயர் யாது? ஊர் எது? தங்களது வியாபாரம் என்ன? தங்கள் தாயார் யார்? தந்தையார் யார்? தங்கள் குலம் என்ன? சிறிது சொல்லலாமா? நான் அறிந்து கொள்ளத் திருவாய் மலரலாமா?" என் றெல்லாம் சரமாரியாக அடுக்கடுக்காகக் கேட்பார்கள். இத்தகையை ஈனர்களிடம் சொல்லக்கூடாது.

**"நேரா அழுக்குத் துணியாகில் உன்றனை நேரில் கண்டும்**
**பாராதவரொன நிற்பார். உடுத்தது பட்டெனிலோ**
**வாரா திருப்பதென் வாரும்என்பார் இந்த வஞ்சகர்பால்**
**சேராது நன்னெஞ்சமே ஒற்றியூரானைச் சேர் விரைந்தே**
**காயார் சரிகைக் கலிங்கம் உண்டேல் இக்கலிங்கங் கண்டால்**

**நீயார்? நின்பேர் எது? நின் ஊர் எது? நின் நிலை எது? நின் தாயார், நின் தந்தை எவர்? குலம் எது? என்பார் சாற்றும் அவ்வல் வாயாரிடஞ் செலல் நெஞ்சேவிடை தரவில்லையன்றே.**

இந்த வண்ணம் உலகம் ஆடைக்கு அதிக மதிப்புத் தருகின்றது. ஆடை அணி கலன்கள் முதலிய ஆடம்பரம் இன்றிய ஔவை யாரைப் பாண்டிய மன்னனது திருமணப் பந்தலின் வாயிலிலே பிடித்துத் தள்ளியதில் வியப்பு ஒன்றுமில்லையே! ஔவையார் மக்களின் மிகுதியில் அதிகமான அலைப் புண்டு உள்ளே செல்லமுடியாமல் திரும்பினார். பாவம்! மதுரையை விட்டே புறப்பட்டு விட்டார். ஔவையார் திருமண விழாவில் கலந்து மகிழ வேண்டும். நல்லுணவு உண்டு, பாண்டியனிடம் பரிசு பெறவேண்டு மென்று சில புலவர்கள் வருகின்றார்கள்.

எதிரிலே வருகின்ற தமிழ் மூதாட்டி யாகிய ஔவையாரைக் கண்டு 'தமிழ்த் தாயே! பாண்டிய வேந்தருடைய திருமணம் வெகு சிறப்பாக நடக்கின்றதாமே! உயர்ந்த உணவுகள் படைக்கின்றார்களாமே! தாங்கள் இனிது உண்ர்களா? என்று வினவினார்கள்.

அப்போது ஔவையார் அந்தப் புலவர்களைப் பார்த்து 'ஐயன்மீர்! உண்டேன், உண்டேன், உண்டேன்' என்று மூன்று முறை நீளமாகக் கூறினார். "என்ன அம்மா! மிக்க நீளமாக உண்டேன், உண்டேன், உண டேன் என்று மும்முறை மொழிந்தீரே! உணவு நிரம்பப் பலமோ? நீரும் நிரம்ப உண்டீரோ? என்றார்கள் புலவர்கள்.

ஐயன்மீர்! தெளிந்த தமிழிலே வல்ல பாண்டிய மன்னருடைய மகத்தான திருமணத்திலே நான் உண்ட உயர்வை உரைக்க வேண்டுமா?

**"நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசியால்**
**சுருங்குண்டேன் ஆனால் சோறுமட்டும் உண்டிலேன்"**

என்றார் அம்மையார்.

இப்பொருள்கள் அடங்கிய அருமைப் பாடல் இதோ உள்ளது.

**"வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்**
**துண்ட பெருக்கம் உரைக்கக்கேள் – அண்டி**
**நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீள்பசி யினாலே**
**சுருக்குண்டேன் சோறுண்டி லேன்".**

***நன்றி :***

**வாரியார் வழங்கிய சிந்தனைச் செல்வம்**

# பெரியபுராணம்

வே. தனபாலசிங்கம் அவர்கள்

அரனாரடி கொடுக்க அருண்மொழியார் தந்த புராணம்
பெருமடியார் பெருமைகளைப் போற்றிடவே தோன்றிய புராணம்
பக்தியுடனிலக்கியப் பாங்கினையே காட்டும் புராணம்
முக்தியாம் மெய் வாழ்வில் மூழ்கிட வழிகாட்டும் புராணம்
மெஞ்ஞானி விஞ்ஞானி மேன்மையுடன் மெச்சும் புராணம்
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நற்புராணம்
தமிழர் சால்பதனைச் சாற்றிடவே வந்த புராணம்
அமிழ் தனைய அருள்வாழ்வை அளித்திடு புராணம்
அநபாய வேந்தன் ஆதரவில் அரங்கேறிய புராணம்
பெரிய புராணமெனப் பெரியோர் போற்று புராணம்.

மணிமுடியிந்திரன் மாலயன் முதலாந் தேவருந் தேடிக் காணாதவன் எம்பிரான். மும்மூர்த்திகளுக்கும் முதல்வன். பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியன். பேரருளுடையவன். பரிசுத்தமானவன், நண்ணினர்க்கு நல்லன். இந்தத் தனிப்பெரும் வள்ளவன் அருளினாலே தொண்டர்தம் பெருமையை உலகிற்கு எடுத்துரைக்க வேண்டும் என்ற எண்ணம் அருண்மொழித் தேவருக்கு உண்டாயிற்று. தமது எண்ணம் நிலைபெறத் தில்லையம்பல மூர்த்தியின் துணையை நாடினார். வேண்டுவார்க்கு வேண்டுவன ஈவானாகிய இறைவன் "உலகெலாம்... என்ற முதலடியை எடுத்துக் கொடுத்தார். தொண்டர் தம் பெருமையை 4253 செய்யுள்களிலே பாடினார் சேக்கிழார். உலகெலாம் என்றே முடித்தார் எம்பெருமான் வாக்கை அருள்வாக்காகக் கொண்டு பாடினபடியால் திருத்தொண்டர் புராணத்திற்குப் பெரியபுராணம் என்ற பெயர் சாலப் பொருத்தமுடையதே.

இந்நூலை வரலாற்றுக் கண் கொண்டு பார்த்தால் இது ஒரு சிறந்த வரலாற்று நூலாகும். சேக்கிழார் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டு. திருத்தொண்டர்கள் அறுபத்து மூவர் காலம் ஏறக்குறைய கி.பி 300- முதல் 900 வரையுள்ள காலம் நாயன்மார்கள் வடக்கே கரம்பிலிருந்து தெற்கே மதுரைவரையிற் பல நாடுகளில் வாழ்ந்தவர்கள். பல காலங்களில் பரந்து பட்டு வாழ்ந்தவர்கள். பல குடிகளையோ குலங்களையோ சேர்ந்தவர்கள் அப்பெரு மக்களுடைய பிறப்பிடம், சாதி, செய்த தொண்டு, அற்புதம் முதலியவற்றைத் திருமுறைகளை மட்டும் நம்பி எடுக்க வில்லை. நூலாசிரியர் தானே பல இடங்களுக்கும் நேரில் சென்று ஆரத்தீர ஆராய்ந்து பல செய்திகளையும் எடுத்து வந்து பின்பே நூல் பாடியிருக்கிறார். இது வெறும்புனைந்துரையன்று நாட்டின் ஆட்சிமுறை பெரும் பிரிவுகள், உட்பிரிவுகள், மற்றைய சமயங்களின் கொள்கைகள் யாவற்றையும் சேக்கிழார் தெட்டத்தெளிவாக எடுத்துக் காட்டியுள்ளார். சிறுத்தொண்டர் புராணத்தில் வாதாபிப் படையெடுப்பைக் கூறியுள்ளார். எனவே வரலாற்று ரீதியாக நோக்கினால் இந்நூல் பெரிய நூலேயாகும்.

சோழர்காலம் சைவமும் தமிழும் பெருமை பெற்ற காலம். வழிபாட்டு முறைகள் வளர்ந்த காலம். கல்வெட்டுக்கள் தோன்றிய காலம். அடியார்களுக்குக் கோவில்கள் அமைத்த காலம். மேன்மை கொள் சைவ நீதி துலங்கிய காலம். இப்படியான பொற்காலத்திலே எழுந்த நூலான படியால் பெரியபுராணம் சிறந்த இடம் பெறுகின்றது. சோழர் ஆட்சியிலே தமிழ் நாட்டு நாயன்மார்கள் பற்றிப்பாடிய தமிழ்க் காவியம் இது ஒன்றேயாகும். நூலாசிரியருக்கு வேண்டிய சகல உதவிகளையும் அரசனே செய்தான் என்றால் இந்நூலின் பெருமைதான் என்னே!.

தமிழ் நாட்டிலே கோயில் என்றால் சிறப்பாகச் சிதம்பரத்தையே குறிக்கும். இப்படியான சிறப்பு வாய்ந்த இடத்திலே நடராசப் பெருமானின் அருளினாலே பாடப்பட்ட நூல் இங்கேயே அரங்கேற்றப் பட்டது. ஆயிரங்கால் மண்டபத்தில் தில்லைப்பிரான் முன்னிலையில் அநபாயச் சோழன் அருகிருப்ப பெருஞ் சைவச் சான்றோர் கூட்டத்தில் சேக்கிழார் தான் பாடிய திருத்தொண்டர் புராணத்தை அரங்கேற்றம் செய்தார். வேந்தன் சேக்கிழாருக்குப் பெரும் சிறப்புக்கள் செய்தான். அன்று முதல் சேக்கிழார் "தொண்டர் சீர் பாடுவார்" என்ற சிறப்புப் பெற்றார். இந்த வகையில் பார்த்தாலும் பெரியபுராணம் என்ற பெயர் இந்நூலுக்கு மிகப் பொருத்தமுடையதே.

திருத்தொண்டர் புராண நூலாசிரியரின் பெருமை அளப்பரியது. சேக்கிழார் குடியிற் பிறளாதவர். நிறைந்த கல்வி ஞானம் உடையவர். அவர் ஒரு ஞான சூரியன். உலகியல் அறிவுடையவர். சோழ மன்னனின் முதல் அமைச்சர் பதவி வகித்தவர். அமைச் சருக்குரிய இலட்சணங்கள் அத்தனை யும் பொருந்தியவர். முதல் இராசராச சோழனின் பெயராகிய அருண்மொழித் தேவர் என்ற இயற்பெயரை உடையவர். இவர் நல்லவர் வல்லவர் இவரது முயற்சி ஒப்பற்ற பலனைத் தந்தது.

சேக்கிழார் திருத்தொண்டர் தொகை பாடியதனால் தமிழ்மொழி வளம் பெற்றது. இவர் தமிழ் வளம் உள்ளவர். **"தமிழ் அருமை அறிசிகாமணி"** என்ற பெயர் பெற்றவர். பின்வரும் செய்யுளில் தமிழின் பெரு மையைக் காணலாம்.

**"மறைமுதல் கிளர்ந்தவாயால் மதி முகிழ் முடித்த வேணி
இறைவர்தம் பெயரை நாட்டி இலக்கணம் செய்யப் பெற்ற
அறை தரும் பாடை அனைத்தையும் வென்று ஆரியத்தோடு
ஊழ்தருதமிழ்த் தெய்வத்தை உள் நினைந்து ஏத்தல்
– செய்வாம்"**

சேக்கிழார் தமிழ் மொழியைப் பற்றிக் கூறிய சில அடிகளை நோக்குவோம்.

1. "ஞாலம் அளந்த மென்மைத் தெய்வத் தமிழும்..."
2. "சால்பாய மும்மைத் தமிழ்..."
3. "விரும்பும் தமிழ்..."
4. "வசையில் செழும்தமிழ்...."
5. "உயர் தமிழ்..."
6. "அஞ்ஞானச் செந்தமிழ்...".

தமிழின் அருமை இனிமை அறிந்த அருண்மொழித்தேவர் இயற்றிய காவி யத்திற்குப் பெரியபுராணம் என்ற பெயர் தமிழ்த்தாயின் பெருமை நோக்கியும் பொருத்தமுமாகியதே.

பெரியபுராணத்தின் பெருமைக்கு முக்கியமானவர் தன்னேரில்லாத் தலைவ

னாகிய சுந்தரர். இவர் சிறந்த காப்பியத் தலைவர். அறிவாளி அந்தணன். செயற்கருஞ் செயல்களைச் செய்தவர். ஒரு மணம் முடிக்கத் தடுத்த இறைவனைக் கொண்டு இருமணம் முடித்தவர். தம்பிரான் தோழர் என்றழைக்கப்பட்டவர். எனவே கதாபாத்திரத்தின் சிறப்பு நோக்கியும் இந்நூல் சிறப்புப் பெறுகிறது.

இலக்கியக் கண்கொண்டு இந்நூலைப் பார்த்தால் இது ஒரு சிறந்த இலக்கிய நூல் என்பது தெளிவாகும். இலக்கியத்திற்குரிய இலக்கணங்களெல்லாம் இதற்கு உண்டு. ஆசிரியர் தொல்காப்பியனார் **"முதல், கரு உரிப் பொருள் மூன்றே நுவலுங்காலை முறை சிறந்தனவே"** என்றார். இலக்கியத்திற்கு உரிப் பொருளே உயிரான பொருள். அந்த உரிப் பொருளை வளர்க்கின்ற பொருள் கருப்பொருள். முதற்பொருள் உரிக்குத் தந்தையும் தாயுமாக இருக்கும். முதற்பொருள் காலம் இடம் என இரு வகைப்படும். இந்த இலக்கணங்கள் எல்லாம் பொருந்திய சுவையுள்ள இலக்கிய நூல் பெரிய புராணம் என்பதைக் கற்றுச் சுவைத்தவர்களுக்குப் புலனாகும். சொற்சுவை, பொருட்சுவை, வருணனைகள், காதல் முதலான பலவற்றையும் நாம் இதில் காணமுடியும்.

சமயக் கண்கொண்டு பார்ப்போமானால் திருத்தொண்டர் புராணம் சிறந்த சமய நூலாகும். சேக்கிழார் பாடல்களில் சைவ மணம் கமழ்கின்றது. தெய்வ மணம் வீசுகின்றது. சிவனைப்பற்றியும் அடியார்கள் பற்றியும் வேதாகம உண்மைகள் பற்றியும் மிகத் தெளிவாக எடுத்துக் கூறுகிறார் சேக்கிழார். பக்திச் சுவை கொட்டக் கூடிய பாடல்களைப் படித்துப் பயன்பெறலாம். அரிய பெரிய சைவசித்தாந்தக் கருத்துக் களையெல்லாம் எடுத்துக்காட்டியுள்ளார். இத்தகைய பெருமை எல்லாம் நிறைந்த பெரியபுராணத்துள் நுழைந்து சில செய்யுள்களை எடுத்து நோக்குவோம்.

**"உலகெலாமுணர்ந் தோதற் கரியவன்**
**நிலவுலாவிய நீர்மலி வேணியன்**
**அலகில் சோதியன் அம்பலத்தாடுவான்**
**மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவோம்..."**

சைவ மக்கள் எச்செயல் செய்தாலும் முதலில் கடவுளை வணங்குவர். இது எமது சிறந்த மரபு. சேக்கிழாரும் முதலில் இறைவனை வணங்குகிறார். நாம் வாழ்த்தி வணங்கும் கடவுள் ஓதற்கு அரியவன், நீர்மலி வேணியன், அலகில் சோதியன், அம்பலத் தாடுவான் என்று மிக ஆழ்ந்த பொருள் புலப்படக் கூறியுள்ளார்.

## காவலன் சிறப்பு

**"மண்ணில் வாழ்தரு மன்னுயிர்கட்கெல்லாங்**
**கண்ணுமாவியு மாம் பெருங்காவலான்**
**விண்ணுள்ளார் மகிழ்வெய்திட வேள்விகள்**
**எண்ணில்லாதன மாணவியற்றினான்"**

இந்தப் பூமியில் வாழ்கின்ற உயிர்களை மன்னன் கண்ணையும் உயிரையும் போலக் காவல் செய்தான். மனிதர்களை மட்டுமல்ல நடப்பன, பறப்பன, ஊர்வன போன்ற எல்லா உயிர்களையும் அரசன் காவல் செய்தான். வேறொருவகையாகச் சொன்னால் இந்தப் பூமியில் வாழும் உயிர்களுக்குக் கண்ணாகவும், உயிராகவும் இருப்பவன் மன்னனே. மண்ணுலகத்தை காவல் செய்யும் பொறுப்போடு வேந்தன் நிற்க வில்லை. விண்ணவர் மகிழ வேள்வி செய்கின்றான். வேள்வி விண்ணவர்களை மகிழ்விப்பதற்காகவும், அரசன் நல்வாழ்வு

வாழ்வதற்காகவும், மன்னுயிர்கள் நல்வாழ்வு வாழ்வதற்காகவும் நாடு செழிப்பதற்காகவும் செய்யப்படுவது. அரசன் செய்த வேள்விகளோ கொஞ்சமல்ல எண்ணில்லாதன. இன்றைய அரசாட்சி முறையுடன் சேக்கிழார் காட்டும் அரசாட்சிமுறையை நாம் ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும்.

**"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்**
**தானதனுக்கிடையூறு தன்குற்றன் பரிசனத்தால்**
**ஊனமிகு பகைத் திறத்தாற் கள்வராலுயிர்தம்மால்**
**ஆனபயமைந்துந் தீர்த்தறங் காப்பானல்லனோ"**

அரச தருமம் இங்கே கூறப்பட்டிருக்கிறது. தன்னால் (அரசனால்) தன்பரிசனங்களால் பகைவர்களால், கள்வரால், ஏனைய உயிர்களால் எவ்வித தீமையும் இந்த மாநிலத்து வாழும் உயிர்களுக்கு ஏற்படாமல் பாதுகாக்கும் பாரிய பொறுப்பு மன்னனுக்கு உண்டு. அக்கால அரசர்கள் இந்த முறையிலேதான் செங்கோல் செலுத்தினார்கள். இன்றைய இலங்கையில் உள்ள எமக்கு இது வியப்பாக இருக்கலாம்.

முல்லைக்குத் தேர் கொடுத்தான் பாரி. பசுக்கன்று கொலையுண்டதற்காகத் தன்மகனைத் தேர்ச்சில்லில் நெரித்துக் கொலை செய்தான் மனுநீதி கண்ட சோழன். புறாவிற்காகத் தன்னுடம்பைக் கொடுத்தான் சிபிச்சக்கரவர்த்தி. பண்டைய அரச நீதி இதுவாகும்.

## காதற்காட்சி

**"மாதவஞ் செய்த தென்றிசை வாழ்ந்திடத்**
**தீதிலாத் திருத்தொண்டத் தொகை தரப்**
**போதுவாரவர்மேன் மனம் போக்கிடக்**
**காதன் மாதருங் காட்சியிற் கண்ணினார்.**

பரத கண்டத்திலே தென்னாடு மாதவஞ் செய்த நாடு. அந்நாடு இன்னும் சிறப்பாக வாழவும், தீமைகளையெல்லாம் இல்லாமற் செய்யவும் திருத்தொண்டர் தொகை பாடவும், தென்னாட்டிற்குப் போக வேண்டியவராகிய ஆலால சுந்தரர் மனதை அவர்கள் மேல் விட கமலினியார், அனிந்திதையாராகிய காதல் மாதரும் காட்சியிற் கண்ணினார். காட்சியில் பட்டார்கள். இருதிறத்தார் நோக்கும் ஒத்து ஒருநோக்காக நிகழ்ந்தன.

இருவரும் மாறிப்புக்கிதயமெய்தினர். **"கண்ணொடு கண்ணினை நோக்கொக்கின் வாய்ச்சொற்கள் என்ன பயனுமில"** என்ற வள்ளுவரின் வாய்மொழி இங்கு நோக்கற்பாலது.

சுந்தரர் திருவாரூர்ப் பெருமானை வணங்குவதற்கு வந்திருக்கிறார். பரவையாரும் தோழிப் பெண்களுடன் அங்கே வந்திருக்கிறார். விதிவழி கூடச் சுந்தரர் பார்வை பரவைமேற் செல்கிறது. அதே நேரத்தில் பரவையார் பார்வையும் சுந்தரர் மேல் செல்கின்றது. சுந்தரர் அதிசயித்து நிற்கின்றார்.

**"கற்பகத்தின் பூங்கொம்போ காமன்றன் பெருவாழ்வோ**
**பொற்புடைய புண்ணியத்தின் புண்ணியமோ? புயல் சுமந்து**
**விற்குவளை பவளமலர் மதிபூத்த விரைக் கொடியோ?**
**அற்புதமோ? சிவனருளோ? அறியே னென்ற திசயித்தார்**

சுந்தரர் அதிசயித்து நிற்கும் அதே நேரத்திலே பரவையாரின் காதல் நிலையை "முன்னே வந்தெதிர்தோன்றும் முருகனே..." என்ற செய்யுளிலே கவிஞர் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

காதலனும் காதலியும் சிவனடியார்கள் ஒன்றுபட்டு உள்ளங்கள் இரண்டும் சிவனருளையே முன்னிட்டு நிற்கின்றன. இதனாலே அற்புதமோ சிவனருளோ

என்கிறார் சுந்தரர். செஞ்சடையண்ணல் மெய்யருள் பெற்றுடையவனோ என்கிறார் பரவையார். கற்பகத்தின் பூங் கொம்போ என்று சுந்தரர் நினைக்கும் போது முருகனோ என்று பரவையார் நினைக்கிறார். காமன் தன் பெரு வாழ்வோ என்று அவர் நினைக்க மன்மதனோ என்று பரவை நினைக்கிறார்.

கம்பன் காதற்காட்சியை மிதுலையில் **"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்..."** என்ற செய்யுளிலே காட்டியிருக்கின்றான். கம்பன் காட்டும் காதற் காட்சிக்கும் சேக்கிழார் காட்டும் காதற் காட்சிக்கும் இடையில் ஒரு பெரிய வேறுபாடு உண்டு. கம்பன் இலக்கிய நயத்தை மட்டுந்தருகிறார். சேக்கிழார் இலக்கியப்படைப்பின் நோக்கத்தை நிறை வேற்றும் பொருட்டு, இலக்கிய இன்பத்துக் கூடாகத் தெய்வீக ஒளியொன்றைக் காட்டியுள்ளார். சேக்கிழாரின் காதற் காட்சிச் செய்யுள்கள் பொருள் ஆழம் உடையன. சுவைக்க வேண்டியன. இன்புற வேண்டியன. இங்கே உண்டாகின்ற இன்பம் பேரின்ப மாகும் இறைவனைப் பற்றிச் சிந்திக்கின்ற இன்பமாகும்.

சுந்தரர் பேரின்ப வெள்ளத்துள் நிற்கும் நிலையைச் சேக்கிழார் மிக அழகாக எடுத்துக் காட்டுகிறார். மிக அருமையாக இருக்கிறது.

**"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள**
**அளப்பருங் கரணங்களான்குஞ்**
**சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்**
**திருந்து சாத்து விகமேயாக**
**இந்து வாழ்சடையா னாடுமானந்த**
**வெல்லையிற்றனிப் பெருங்கூத்தின்**
**வந்த பேரின்ப வெள்ளத்துட் டிளைத்து**
**மாறில்லா மகிழ்ச்சியின் மலர்ந்தார்"**

கண்ட கண்களோ எம் பெருமானை இடையறாமல் நோக்குகின்ற இந்த நிலையில் மற்ற நான்கு இந்திரியங்களின் தொழிற் பாடுகளும் அடங்கிக் கண்களுக்கே சக்தி சென்று விட்டது. இதனால் சுந்தரரின் செவிகள் கேட்கவில்லை. மெய்யுணர வில்லை, வாய் அசையவில்லை. அந்தக் கரணங்கள் நான்கும் தமது தொழிற்பாட்டைச் சிந்தைக்குக் கொடுத்துவிட்டன. சிந்தை இடையறாமல் எம்பெருமானையே தியா னிக்கிறது. சாத்வீகம் தலையெடுக்கிறது. இந்தநிலையிலே சுந்தரரின் பரிசுத்த உள்ளம் சிவனிடத்தே தேய்கிறது. ஆனந்தக் கடலில் குளிக்கிறார் சுந்தரர். இங்கே சுந்தரர் கண்ட கூத்து தனிப்பெருங் கூத்து. இந்து வாழ் சடையான் கூத்து. காலைத் தூக்கி நின்றாடும் தெய்வத்தின் கூத்து முதல் நடு – ஈறு இல்லாத கூத்து உண்மைத் தத்துவத்தைக் காட்டும் கூத்து.

மறைச் சிலம்பார்க்கக் கேட்டார். பின் சுற்றுமுற்றும் பார்த்தார். எல்லை காணமுடியாத பெருங்கூத்தைக் கண்டார் சுந்தரர் மகிழ்ந்தார்.

*(தொடர்ச்சி அடுத்த இதழில்)*

# இதய அஞ்சலி

## மூதறிஞர், சிவத்தமிழ் அறிஞர், இலக்கிய வித்தகர், சிற்பி சிவ. சரவணபவன் அவர்களின்

### பிரிவு குறித்து எமது இதயபூர்வமான

### அஞ்சலிகளை சமர்ப்பித்துக் கொள்கின்றோம்.



கலைச்செல்வி படைத்த சிற்பி
கலை முடிந்து போச்சு
எழுத்துலகின் உழவன்
ஏர் முறிந்து போச்சு
இந்து சாதனம் இலக்கிய
கலைக்களஞ்சியம் காலன்
கையில் அகப்பட்டுப் போச்சு
இனி எம்மிடம் என்னதான்
இவருக்கு நிகராய் உண்டு?

தெல்லிப்பழை.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

# நோய் தீர்க்கும் யோகாசனம்

**Dr. S. டிசியந்தி**

யோகம் என்றால் அதிஷ்டம் எனப் பொருள்படும். மனிதனுடைய உடலை நீண்ட காலத்திற்கு அழியாமல் பாதுகாக்கும் திறனுடையது யோகாசனம் ஆகும்.

யோகாசனங்களை சரிவர அறிந்து பயிற்சி செய்வதனால் மனித உடலில் அவயங்கள்/ உறுப்புகள் சீராக இயங்கு வதற்கு வழிவகுக்கின்றது. அத்துடன் மனநலமும் பேணப்படுகின்றது.

யோகாசனத்தை திருமூலரே தனது திருமந்திரப் பாடல்களின் மூலமாக உலகிற்கு அருளியுள்ளார். இது பின்னர் உலக மாற்றங்களால் உலகில் உள்ள பல இனங்களிடையே பரவியதுடன் சில மாற் றங்களையும் கொண்டுள்ளதை அவ தானிக்க முடிகின்றது. யோகமும் கடவுள் தியானமும் ஒருங்கிணைந்து காணப்படு வதை எவராலும் மறுக்க முடியாது. யோகாசனங்களைப் பற்றி பலர் அறிந்தும் பயின்றும் இருந்தாலும் அதனால் ஏற்படும் பயன்கள் பற்றி அறிந்திருப்போர் மிகச் சிலரே. இவ் யோசாகனத்தை செய்வதனால் நோய்வராமலும், வந்த நோயிலிருந்து விடுபடவும் உதவியாக அமைகின்றது.

யோகாசனத்தினை ஒரு குருவிடம் பயின்று பின்னர் தாமாகவே தினமும் காலையில் உணவருந்துவதற்கு முன்னர் செய்வது காலச்சிறந்தது.

யோகாசனம் செய்வதற்கு முன் பின்வரு வனவற்றை கருத்தில் கொள்வது சிறந்தது.

01. காலை எழுந்தவுடன் காலைக் கடன்கள் முடித்த பின்னர் செய்வது சிறந்தது.
02. உணவு அருந்துவதற்கு முன் செய்தல்.
03. பத்மாசனம்.
    மிகச் சுலபமான ஆசனம். இதனால் மனம், உடல் வலிமை பெறும். போதிய காற்றோட்டமுள்ள வெளிச்ச முள்ள இடத்தினை தெரிவு செய்தல்.
04. இறுக்கமான உடைகள் அணிவதை தடுத்தல்.
05. யோகா செய்வதற்கான ஒரு பாய் / துணியினை விரித்து அதன் மேல் நின்று செய்தல்.
06. மெதுவாக ஆறுதலாக ஒவ்வொரு ஆசனமாக நாளாந்தம் அதிகரித்து செய்து பழகுதல்.
07. மனமும் உடலும் சமநிலையில் (relax) வைத்திருத்தல் வேண்டும்.

உதாரணமாக சில ஆசனங்கள் பற்றிப் பார்ப்போம்.

1. நிகுஞ்சாசனம்
   இது எமது சைவ பெண்களினால் செய்யப்படும்.
2. பஞ்சாங்க நமஸ்காரம்
   பஞ்ச அங்கங்களும் சரிவர நிலத்தில் படும்படி நமஸ்காரம் செய்வது (2 முழங்கை, 2 முழங்கால், நெற்றி)
   பயன்கள் – கற்பாசயம் பலன்பெறும் குடல் இறக்கம் ஏற்படுவது தடைப்படும்
3. பத்மாசனம்
   மிகச் சுலபமான ஆசனம். இதனால் மனம், உடல் வலிமை பெறும்.
4. வட்டக்கோணாசனம்
   மூலவியாதி, சலரோகம் என்பவற் றிற்கு நிவாரணம் வழங்குவதுடன் வராமலும் தடுக்கும்.

5. புஜங்காசனம்
முதுகெலும்பில் பலத்தை பேணுதல், தொந்தி / வயிறு குறைதல், சல ரோகம் வராது தடுக்கும்.

6. தனுராசனம்
முதுகெலும்பு பலம் பெறும் தொற்றி குறையும்.

7. பச்சிமோத்தாசனம்
வயிற்றின் உள் உறுப்புகளிற்கு நன்மை தரும், சலரோகத்தினை கட்டுப்படுத்தும்.

8. மத்சயாசனம்
றைறொயிட் பிரச்சனைகளிற்கு உகந்தது.

9. திரிகோணாசனம்
முது கெலும்பின் அளவை சரி செய்வதுடன் பலத்தைக் கொடுகிறது. உடற் பருமனை குறைக்க வழி வகுக்கின்றது.

10. யோகமுத்தாசனம்
சலரோகத்தினை கட்டுப்படுத்தும்

11. மருந்துப் பெட்டி ஆசனம் / பறவை நாகாசனம்
இவ்வாசனம் பல நோய் பிணிகளை யும் தீர்க்கவும் வராமல் தடுக்கவும் உதவும் என்பதால் இதற்கு யோகிகள் மருந்துப்பெட்டி ஆசனம் எனப்பெயர் வைத்துள்ளனர்.

12. சாந்தியாசனம்
யோகாசனத்தின் இறுதியில் இவ்வா சனம் செய்யப்படுவதால் உடலில் உள்ள அனைத்து உறுப்புகளும் நன்மை பெறுவதுடன் ஆறுதலைப் பெறு கின்றது.

மேலே சில ஆசனங்களைப் பற்றி சுருக்கமாக கூறியுள்ளதனால் பலருக்கும் இதனை பழகவும், நோய்களில் இருந்து விடுபடுவதற்கும் ஆர்வம் உண்டாகும் என நம்புகின்றேன்.

எனவே யோகாசனங்களை பழகும் போதும், செய்யும் போதும் வயது, உடலின் நிலை என்பவற்றை கருத்திற் கொண்டு தமக்கு பொருத்தமான ஆசனங்களை செய்து பயன்பெறுதல் வேண்டும். நோய்தீர்க்கும் மருந்து மட்டும் தீர்வாக அமையாது. இவ்வாறான யோகாசனம், தியானம் போன்றவற்றை தினமும் செய்வதனால் ஆரோக்கியமாக வாழ முடியும் என்பதில் மாற்றுக் கருத்திற்கு இடமிருக்காது.

## இதய அஞ்சலி



### கலாபூஷணம்
### திரு. ச. கதிரவேலு
### அவர்கள்

ஈழத்து மூத்த புகைப்பட ஊடகவியலாளர்
**கலாபூஷணம் திரு.ச.கதிரவேலு** அவர்களுக்கு
எமது இதய அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

தெல்லிப்பழை.

**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

# உரையாசிரியர் ம.க.வேற்பிள்ளை (1848 – 1930)

ம.பா.மகாலிங்கசிவம்

ஈழத்திலே தோன்றித் தமிழ் வளர்த்த அறிஞர்களுள் முக்கியமான ஒருவர் உரையாசிரியர் என்றும் பிள்ளைப்புலவர் என்றும் போற்றப்பட்ட ம.க. வேற்பிள்ளை. இவர் 1848ம் ஆண்டு தமிழுக்கு தைமாதம் 08ம் திகதி மட்டுவிலில் பிறந்தார். இவரது தந்தையார் கணபதிப்பிள்ளை உடையார்.

ம.க. வேற்பிள்ளை சிறுவயதிலேயே தாய் வழி உறவினரான சண்முகம் சட்டம்பியாரிடம் கல்வி கற்றார். பின்னர் நல்லூர்க் கார்த்திகேய ஆசிரியரிடமும் ஆறுமுநாவலரிடமும் மரபு வழி கல்வியைப் பெற்றார். நாவலர் சென்னை சென்ற போது அவருடன் அங்கும் சென்று கல்வி தொடர்ந்தமையும் குறிப்பிடத்தக்கதாகும். நாவலரின் மருகரான வித்துவசிரோமணி பொன்னம்பலம் பிள்ளையிடமும் கல்வி கற்கும் வாய்ப்பு இவருக்குக் கிடைத்தது.

இவர் திருவாதவூரடிகள் புராணம், புலியூரந்தாதி, அபிராமி அந்தாதி என்பவற்றுக்கு உரையெழுதியுள்ளார். அதுமட்டுமன்றி கெவுளி நூல் விளக்க உரையும் இவரால் எழதப்பட்டதாகும்.

சிறந்த கவிஞராகவும் விளங்கிய இவர் ஈழமண்டல சதகம், புலோலி வயிரவக் கடவுள் தோத்திரம், புலோலி பார்வத பத்தினி அம்மை தோத்திரம், ஆருயிர்க்கண்மணி மாலை என்னும் நூல்களை இயற்றி யுள்ளார். வேதாரணிய புராணம், சிதம்பர சிவகாமி அம்மை சதகம் என்னும் நூல் களைப் பதிப்பித்து பதிப்பாசிரியராகவும் விளங்கினார். இவரது உரைகளிலே திருவாதவூரடிகள் புராண விருத்தியுரை அனைவராலும் போற்றப்படுவதாகும். இவரது உரையை வாசித்து இவரின் இலக்கிய வன்மை யையும், சைவ சித்தாந்த அறிவையும் தருக்கத்திறனையும் உணர்ந்த வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை உரை யாசிரியர் என்னுஞ் சிறப்புப் பட்டத்தை இவருக்கு அளித்தார். இன்றும் ஆலயங்களில் திருவாதவூரடிகள் புராணத் திற்கு இவரது உரையையே படிப்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இவர் இயற்றிய செய்யுள் நூல்களில் முக்கியமானது ஈழ மண்டல சதகம் ஆகும். ஒரே பொருள் பற்றி நூறு பாடல்களிற் கூறும் இலக்கிய வடிவம் சதகம் ஆகும். ம.க.வேற்பிள்ளை தமிழகத்தில் இருந்த வேளையில் ஈழத்தின் பெருமைகளைத் தமிழகத்தவர்களுக்கு எடுத்துக் கூறக்கூடிய நூல் ஒன்றை இயற்றுமாறு அங்கிருந்த ஈழத்தவர்கள் கேட்டுக் கொண்டனர். இதற்காகவே இதிகாச புராணக்கதைகளை யும் ஈழத்து வரலாற்றுச் செய்திகளையும் அடிப்படையாகக் கொண்டு ஈழத்தின் பெருமை பேசும் ஈழமண்டல சதகத்தை இவர் இயற்றினார். இந்நூல் 1923ம் ஆண்டு தமிழகத்திலேயே அரங்கேற்றப்பட்டது. அப்போது சிதம்பர வையாகரணிகர, முத்தையப்பட்டாகர் முதலிய பேரறிஞர் களால் இவருக்குப் பிள்ளைப் புலவர் என்னும் கௌரவப்பட்டம் வழங்கப்பட்டது.

ம.க.வேற்பிள்ளை, சைவப்பெரியார் சிவபாதசுந்தரனாரின் சகோதரியாகிய மகேஸ்வரிதேவியைத் திருமணம் செய்தார். இவர்களுக்கு ஐந்து பிள்ளைகள். பிற் காலத்தில் சிறப்புடன் விளங்கிய பண்டிதர் ம.வே திருஞானசம்பந்தப்பிள்ளை. சட்டத் தரணி மாணிக்கவாசகர், குருகவி ம.வே. மகாலிங்கம் ஆங்கில ஆசிரியர்களான கந்தசாமி, நடராசா ஆகியோரே இவரு மாவார். ம.க.வேற்பிள்ளை தொடக்கி வைத்த கவிதைப் பரம்பரை அவரது மகன் குருகவி ம.வே. மகாலிங்கசிவம், அவரது மகன் புலவர் ம. பார்வதிநாதசிவம், அவரது மகன் ம.பா.மகாலிங்கசிவம் என நான் காவது பரம்பரையாகவும் தொடர்வது குறிப்பிடத்தக்கதாகும்.

மட்டுவிலில் இன்று சந்திர மௌலீச வித்தியாசாலை என்ற பெயரில் வழங்கும் பாடசாலையை உருவாக்கிய ஸ்தாபகர் ம.க.வேற்பிள்ளையே. இவரது காலத்திற் காவியப் பாடசாலையாகவும் இப்பாட சாலை விளங்கியது.

நாவலரிடம் கல்வி கற்ற சிறப்பினால் ம.க.வேயின் பேச்சு எழுத்து எல்லாமே நாவலருடையது போன்று அமைந்தி ருந்தன. நாவலர் மரபைப் பின் பற்றிப் பிரசங்கம் செய்வதிலும் இவர் ஈடுபட்டார். சிதம்பரம் நாவலர் சைவப் பிரகாச வித்தியாசாலை அதிபர் அப்பாடசாலைக்கு இவரது சேவையை விரும்பி அழைத்தார். அங்கு சென்று ம.க.வேற்பிள்ளை சிறிது காலம் உதவி ஆசிரியராக இருந்த பின் ஓய்வு பெறும் வரை தலைமை ஆசிரிய ராக இருந்து பணியாற்றினார்.

ஈழத்தில் இவரிடம் கற்ற மாணவர்களில் வித்துவான் ந. சுப்பையாபிள்ளை, பண்டிதர் ஏகாம்பரநாதர், வட்டுக்கோட்டை அம்பல வாண நாவலர் ஆகியோர் முக்கியமான வர்கள். தமிழக மாணவர்களில் திருவாவடு துறை ஆதின வித்துவான் தண்டபாணி தேசிகர் முதன்மையானவர் ம.க.வேற் பிள்ளை அவர்கள் 17.02.1390ஆம் திகதி சிதம்பரத்திலே காலமானார்.

*நன்றி :*
**இலக்கியப் பூக்கள்**
**தொகுப்பாசிரியர் முல்லை அமுதன்**
**காற்றுவெளி (லண்டன்) வெளியீடு**
**2008**

**சினம் அடங்கக் கற்றாலும்**
**சித்தியெல்லாம் பெற்றாலும்**
**மனம் அடங்கக் கல்லார்க்கு**
**வாய் ஏன்? பராபரமே**

**– தாயுமானவர்**

## சிறுவர் விருந்து

# சக்தியின் மகிமை

சகோதரி யதீஸ்வரி அவர்கள்

அன்பான பிள்ளைகளே!

அன்பு வணக்கம்!

நவராத்திரியில் அம்பிகையை வழிபட்டு எல்லா நலனும் பெறுவோம். பராசக்தியின் அற்பதமான திருவிளை யாடல்களில் ஒன்றை இப்போது கேளுங்கள்.

சண்டன், முண்டன் என்ற பொல்லாத அசுர சகோதரிகள் வரபலத்தால் மிகுந்த வல்லமை பெற்று தேவர்கள், முனிவர்கள் யாவரையும் பலவாறு துன்புறுத்தினர். துன்பம் தாங்க முடியாத தேவர்களும் முனிவர்களும் அன்னை பராசக்தியைத் தொழுதனர். மிக அழகிய பெண் வடிவத்துடன் தேவதை கணங்கள் புடைசூழ அம்பிகை சண்ட முண்டர்களை அழிக்கப் புறப் பட்டாள். சைலபுத்ரீ, பிரம்மச்சாரிணீ, சந்ரகண்டா, கூஷ்மாண்டா, ஸ்கந்த மாதா, காத்யாயணீ, காலராத்ரீ என்ற சக்திகளின் தலைமையில் தேவதை களின் படை எழுந்தது.

சண்ட முண்டர்களில் இருவரும் பல சேனாவதிகளின் தலைமையில் படை களை அனுப்பினர். இரு படைகளுக்கும் இடையில் உக்கிரமான போர் நடந்தது. அசுரப்படைகள் பெருமளவு அழிந்தன. அவ்வேளையில் இரத்தபீகன் என்ற ஒரு அசுரன் தனியொருவனாக தேவதைப் படையை எதிர்த்தான்.

இரத்தபீகனிடம் ஒரு வியப்பான ஆற்றல் இருந்தது. அவனது உடலில் இருந்து ஒரு துளி இரத்தம் பூமியில் வீழ்ந்தால் உடனே அந்த இரத்தத் துளியில் இருந்து இன்னொரு இரத்த பீகன் எழுவான். தேவதைகள் தங்கள் ஆயுதங்களால் பல பக்கங்களில் நின்று அவனை அடித்தனர். அவனுடலில் இருந்து இரத்தம் பெருகியது. உடனே அந்த இரத்தத்தின் ஒவ்வொரு துளியிலுமிருந்த இரத்தபீகர்கள் தோன்றினர்.

அந்த போர்க்களம் முழுவதும் இரத்தபீகர்கள் கூட்டத்தால் நிறைந்தது. தேவதைகள் வியப்புற்று நின்றார்கள். இதனைக் கண்ட மகாசக்தி சற்று கோபத்துடன் தன் புருவங்களை நெரித்தாள். அந்தச் சிறு கோபத்தின் வடிவமாக காளி வெளிப்பட்டு முன் நின்றாள்.

"காளிதேவியே நீ உன் நாக்கினை நீட்டி இரத்தபீகன் உடலிலிருந்து வெளிப்படும் இரத்தம் முழுவதையும் பூமியில் விழாமல் குடித்துவிடுவாயாக" என்று கட்டளையிட்டாள் மகாசக்தி.

காளிதேவியும் உடனே தன் சிவந்த நாக்கினை நீட்டி இரத்தபீகன் உடலில் இருந்து வெளிப்பட்ட இரத்தம் முழுவதையும் குடித்துவிட்டாள். வெளிப்பட்டு நின்ற இரத்தபீகனின் பிம்பங்கள் அனைத்தையும் தேவதை கணங்கள் அழித்தன. உடலில் ஒரு துளி இரத்தமும் இல்லாத நிலையில் இரத்தபீகன் என்ற அசுரன் துவண்டு வீழ்ந்து மடிந்தான்.

இரத்தம் குடித்த வெறியுடன் பயங்கரமாகப் போரிட்ட காளி சண்டனையும், முண்டனையும் கொண்டாள். சண்டனுடைய தலையையும் முண்டனுடைய உடலையும் எடுத்து வந்து மகாசக்தியின் முன்னிலையில் இட்டு வெற்றிச் சிரிப்புச் சிரித்தாள்!

"சாமுண்டா என்ற பெயர் உனக்கு உரித்தாகுக! யார் உன்னை வணங்கினாலும் அவர்களது துன்பத்தைத் துடைத்து வெற்றி அளிப்பாயாக" என மகாசக்தி காளிதேவியை வாழ்த்தினாள்.

# இதய அஞ்சலி

## உயர்திரு ச. சபாரத்தினம் கனகரத்தினம் ஐயா




நல்லூர் செல்லப்பா சுவாமிகள் கோவில் அறங்காவலர்

**உயர்திரு. ச. கனகரத்தினம் ஐயா** அவர்களுக்கு

எமது இதய அஞ்சலிகள் உரித்தாகட்டும்.

**தெல்லிப்பழை.** **ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்**

# திருவெண்ணெய் நல்லூர்
# சுந்தரமூர்த்தி சுவாமிகள் வாதிட்ட மண்டபம்





யாழ்ப்பாணத்து நல்லூர் முருகன் சூரன் போர்க்காட்சி



Print Master. T.P. 021-205 3322